The Public Finance Committee headed by TNA MP M.A.Sumanthiran is relatively a new addition to the committee system of Parliament. ASG Jayathilake observed that the budget office is needed for the Public Finance Committee to come into full operation, and draft legislation for this is at the final stages."In many countries, the chairmanship of committees is held by members of the Government, but in Sri Lanka chairmanship of committees is shared between the Opposition members and Government backbenchers. The people's involvement with Parliament has increased with the committee system and their problems have increasingly been addressed. The open government policy initiated in Parliament with the guidance of Speaker Karu Jayasuriya has gradually made its activities more transparent while interacting closely with the people," he commented.

# அன்றாட நிபுணத்துவ சட்டச் செய்திகளை தெரிந்து கொள்ள

LAW in தமிழ்

www.lawintamil.com

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

கடந்த இதழின் தொடர்ச்சி. .




கர்மகாரகனான சனியை ராசிநாதனாகக் கொண்ட, மனத் துணிவும், எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் அதிகம் பெற்ற கும்ப ராசியினரே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். புது தொழில்நுட்பங்களை கற்பதில் ஆர்வம் உடையவர்கள் நீங்கள். எதிலும் போட்டிகள் இருந்தாலும் பொறாமை கொள்ளமாட்டீர்கள். இந்த ராகுகேது பெயர்ச்சியில் உங்கள் எண்ணத்திலும் செயலிலும் நல்ல மாற்றம் உருவாகும். சாதனை நிகழ்த்துகிற எண்ணத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். வீடு, வாகனத்தில் திருப்திகரமான நிலை உண்டு. ஏற்கனவே வீடு, வாகனம் இருப்பவர்களுக்கும் புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் உங்கள் சொல்கேட்டு நடந்து படிப்பிலும் நல்ல குணத்திலும் முன்னேற்றம் பெறுவர்.

பூர்வீகசொத்தில் பெறுகிற வருமானத்தின் அளவு உயரும். உடல்நலமும் மனநலமும் சிறப்பாக இருக்கும். கடன்களை அடைத்து நிம்மதியடைவீர்கள். கணவன், மனைவி பாசத்துடன் நடந்து குடும்பத்தில் மகிழ்ச்சியை உருவாக்குவர். மங்கல நிகழ்ச்சி திட்டமிட்டபடி சிறப்பாக நிறைவேறும். தந்தைவழி உறவினர்கள் சொல்லும் ஆலோசனையைக் கேட்டு நடப்பதில் மிகுந்த பிரியம் கொள்வீர்கள். எந்த இடத்திற்கு சென்றாலும் ஏதாவது ஒரு தடங்கல் வந்து கொண்டே இருந்ததல்லவா, இனி அந்த நிலைமை மாறும். சொன்னால், சொன்ன நேரத்தில் உங்களால் இனி செல்ல முடியும். ஆடம்பர செலவுகள் வேண்டாம். புத்தம் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். சந்தான பாக்கியம் கிட்டும். தெய்வத்தல யாத்திரை, புனித ஸ்தலங்களுக்கு செல்வது போன்ற நல்ல விஷயங்கள் நடக்கும்.

கோபம் கூடவே கூடாது. ரத்த சம்பந்தப்பட்ட நோய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. வழக்கு வியாஜ்யங்களில் உங்கள் பக்கம் வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கை தேவை. சிலருக்கு பணிகாரணமாக வெளிநாடு, அயலூர் செல்ல வேண்டி வரலாம். லாபகரமான முதலீடுகள் செய்யலாம். அதற்கான பொருளாதார சூழல்கள் உருவாகும். எந்த முதலீடுகளையுமே குறுகிய காலம் செய்யாமல் நீண்ட காலமாக செய்யுங்கள். தொழிலதிபர்களுக்கு உற்பத்தியை உயர்த்த அனைத்து வசதிகளும் திருப்திகரமாக கிடைக்கும். உபரி வருமானம் உண்டு. உபதொழில் துவங்க வாய்ப்பு உருவாகி நிறைவேறும். வியாபாரிகள் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிகளைச் செய்வர்.

லாபம் நன்றாக இருக்கும். மற்ற வியாபாரிகளுக்கு போட்டி குறைந்து புதிய வாடிக்கையாளர் மூலம் விற்பனை உயரும். லாப உயர்வு சேமிப்பை உருவாக்கும். பிற சலுகைகளால் மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிப்பீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். எதிரிகளால் கஷ்டங்கள் உண்டாகாது என்றாலும் அவர்கள் மீது ஒருகண் வைத்திருக்கவும். கலைத்துறையினர் கடினமாக உழைத்தால்தான் துறையில் வெற்றி வாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து விடுவீர்கள். உங்கள் திறமைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். அதேசமயம் உங்களின் வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் மிகவும் கவனத்துடன் இருக்கவும்.

பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை தகுதிக்கேற்ப கிடைக்கும். கர்ப்பிணிகள் தகுந்த சிகிச்சை மற்றும் ஓய்வு கொள்வது அவசியம். சுயதொழில் புரியும் பெண்கள் உற்பத்தி, விற்பனை சிறந்து, தாராள பணவரவு பெறுவர். மாணவர்கள் குருவின் அனுகிரகத்தைப் பயன்படுத்தினால் மாநில ரேங்க் பெறலாம். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை உண்டு. பெற்றோருடன் இருந்த கருத்து வேறுபாடு விலகி அன்பு வளரும். படிப்புக்கான பணஉதவி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். பொது விவகாரங்களில் உங்களின் ஆலோசனை பெரிய அளவில் வரவேற்பை பெறும்.

அவிட்டம் 3, 4: இந்த பெயர்ச்சியில் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கடன் கொடுப்பது, பைனான்ஸ் போன்றவற்றில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. பெண்கள் எதிலும் மிகவும் கவனமாகச் செயல்படுவது நல்லது. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

ஸதயம்: இந்த பெயர்ச்சியில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்க மனம் விட்டுபேச வேண்டியது கட்டாயம். உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாகப் பேசுவது நல்லது. மகிழ்ச்சி உண்டாகும்.

பூரட்டாதி 1, 2, 3: இந்த பெயர்ச்சியில் எதிலும் சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். செயல்திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது. அறிவுத் திறமை அதிகரிக்கும். கல்வியில் வெற்றி உண்டாகும்.

பரிகாரம்: விநாயகப் பெருமானை வணங்க எல்லா துன்பங்களும் நீங்கும். உடல் ஆரோக்யம் உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1, 4, 6, 9.

மலர் பரிகாரம்: சங்குபுஷ்ப மலரை சனிக்கிழமைதோறும் சிவனுக்கு சாத்தி வேண்டிக்கொள்ளுங்கள்.

சொல்ல வேண்டிய மந்திரம்: ஓம் ஸ்ரீ ருத்ராய நமஹ என்ற மந்திரத்தை தினமும் 7 முறை சொல்லவும்.




குருவை ராசிநாதனாகக் கொண்டும் கடும்சொற்களால் உங்களை காயப்படுத்துபவர்களைக்கூட அரவணைக்கும் மீன ராசி அன்பர்களே, நீங்கள் இரக்கம் அதிகமுள்ளவர்கள். தாய் தந்தை மேல் அதிக பற்றுள்ளவர்கள். திருமணம் செய்துகொடுக்கும் இடத்திலும் பெருமையோடு வாழ்வீர்கள். இந்த ராகுகேது பெயர்ச்சி, வாழ்வில் சில சிரமங்களுக்கு மத்தியில் சுபபலன்களை அனுபவிக்க வைக்கும். இருப்பினும் மற்ற கிரகங்களின் சஞ்சாரம் மூலம் சில நல்ல பலன்களையும் பெறலாம். மனதில் சஞ்சலம் தோன்றும். குடும்பப் பொறுப்புகளை தைரியத்துடன் எதிர்கொள்வது நன்மை தரும். எவரிடமும் அளவுடன் பேசுங்கள். தம்பி, தங்கைகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய தாமதம் ஆகுமென்பதால், அவர்களின் அதிருப்தியை சம்பாதிப்பீர்கள்.

சிலருக்கு உடன்பிறந்தவர்களாலும், உறவினர்களாலும் தொல்லை வந்துவிலகும். பணவரவு சுமாராகவே இருக்கும். வீடு, வாகனவகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பயணங்களில் நிதான வேகத்துடன் செயல்படுவதால் விபத்து அணுகாமல் தவிர்க்கலாம். தொழிலதிபர்களுக்கு அதிக மூலதனத் தேவை ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் எதிர்பாராத வகையில் கிடைக்கும். பிற தொழில் செய்வோர் உற்பத்தியை உயர்த்த தரமான பணியாளர்களை பணியமர்த்துவதும், அதனால் அதிக செலவாவதுமான சூழ்நிலை இருக்கும். புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தத் தேவையான இயந்திரம் வாங்குவீர்கள். லாபம் சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்கள் பணியை விரைந்து முடிக்க ஆர்வம் கொள்வர். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு தடையின்றி கிடைக்கும்.

பணிச்சிறப்பை பாராட்டி கூடுதல் பணவரவு, சலுகைகள் கிடைக்கும். சகபணியாளர்களுடன் கொடுக்கல், வாங்கலில் நிதான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். எதிரிகளிடம் இருந்து விலகுவது நன்மை தரும். இயந்திரங்களை கையாளுபவர்கள் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். படித்து முடித்து வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பவர்களுக்கு திருப்திகரமான பணி கிடைக்கும். அரசியல்வாதிகள், தொண்டர்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். அதேசமயம் நண்பர்கள்போல் பழகும் எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும். பொதுவாகவே பிறரிடம் பேசும் நேரத்தில் நிதானம் தேவை. எதிர்க்கட்சியினர் உங்களைப்பற்றிப் பரப்பும் அவதூறுகள் குறித்துக் கவலைப்பட வேண்டாம்.

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பணவரவு அமோகமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பெண்மணிகளுக்குக் கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். பணவரவு சீராக இருக்கும். உடல் ஆரோக்யம் சிறப்பாக அமையும். எங்கும், எப்போதும் பேசும் நேரத்தில் நிதானம் தேவை. மாணவமணிகள் கல்வியிலும், விளையாட்டிலும் வெற்றிக்கொடி நாட்டுவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். யோகா, ப்ராணாயாமம் போன்றவற்றைச் செய்து மனதை ஒருநிலைப் படுத்துவீர்கள்.

பூரட்டாதி 4: இந்த பெயர்ச்சியில் நீங்கள் அடுத்தவருக்கு வலியச்சென்று உதவி செய்வீர்கள். உங்களுக்கு வருமானம் அதிகரிக்கும். வசதிகள் பெருகும், சுக சௌக்கியத்தை தரும். உறவினர்களுடன் சுமுகநிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். நீண்டநாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியத்தை ராசிநாதன் குரு தருவார். மரியாதையும், அந்தஸ்தும் உயரும்.

உத்திரட்டாதி: இந்த பெயர்ச்சியில் நல்லது, கெட்டது அறிந்து சமயோசிதமாக செயல்படுவீர்கள். வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மை வந்துசேரும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரியவெற்றி ஏற்படும். பணவரத்து கூடும். எதிர்பாலினத்தாருடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும்.

ரேவதி: இந்த பெயர்ச்சி மூலம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். எதிர்பாரத இடமாற்றம் ஏற்படலாம்.

பரிகாரம்: முருகப்பெருமானை வணங்க எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். கடன் பிரச்னை தீரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2, 6, 9.

மலர் பரிகாரம்: முல்லை மலரை வியாழக்கிழமை தோறும் அம்மனுக்கு சாத்தி வழிபாடு செய்யுங்கள்.

சொல்ல வேண்டிய மந்திரம்: ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ என்ற மந்திரத்தை தினமும் 11 முறை சொல்லவும்.

பார்வை PARVAI
INSEIN Tamil Newsletter/ அறிவியல் வழிகாட்டி
அன்பான பார்வை வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி
INSEIN NEWSLETTER
பார்வையைப் பார்க்க கீழ்கண்ட முகவரியை நாடுங்கள்
Facebook
www.facebook.com/parvai.official
Website
www.insein.co.uk/parvai/
படித்தவர்கள் பாராட்டும் பத்திரிகை பார்வை


LONDON SWAMI AYYAPPA CENTRE
453 High Street, Manor Park, London E12 6TJ
T: 020 8586 6761 M: 0740 4388 848
W: www.londonswamiayyappacentre.org
LONDON SWAMI AYYAPPA CENTRE
THATHUVAM MASI
EUROPE'S FIRST GRANIT STATUE
NEW SHIRDI SAI BABA TEMPLE IN HACKNEY
28-32 ELLINGFORT RD, E8 3PA
108 ValampuriSangu Abishegam for SivaLingam
Full Moon Pooja (9 Planets 9 Flowers
Clear Obstacles)
COME AND SEE
MIRACLE WILL HAPPEN


YAAL EXPRESS
SRI-LANKAN & SOUTH INDIAN CUISINE
Tel: 020 8868 3861
Opening Times 7days a week (including Bank Holidays)
Mon-Sun | 8.00am-11.00pm
Parties & Outside Catering Available
Tel: 0208 868 3861 Mob: 07469 769 281
426B • Raynes Lane • Harrow • HA5 5DX
QUALITY TAKEAWAY | ORDER ONLINE
www.yaalexpress.com


SHIVA SHAKTHI ASTROLOGY
Pandith: Sai Ram
SPIRITUAL HEALER
World famous Indian Astrologer
from 9 Generations
30 Years of Experience
ASTROLOGY PREDICTION IS GOD'S GIFT, PASSED DOWN FROM GENERATION TO GENERATION.
Expert in elimination and kind of Black Magic. Complete knowledge of
Numerology, Face Reading, Palmistry from Generation to Generation.-
Contact us to kown about your Past, Present and Future.
Removes Black Magic and Evil Spirits and gives Protection
VEDIC SOLUTIONS
ARE AVAILABLE FOR:
Health
Education
Family
Jadu
Marriage
Divorce
Love
Children
Business
Promotion
Court cases
Voodo
Husband and wife relationship
Obeav, And many more..!
100% Guarantee
We can recommend Lucky numbers
for all Lotteries
We give suitable solutions
for all problems
PRIVATE AND CONFIDENTIAL
We can speak:
Hindi, Telugu, English and Tamil
All Religions welcome
Any problems cleared
within 9 days
Office Hours: 7 Days a week 10.00AM-8.00PM
Unit 12, Chandani Bazar,
29/33, Ealing Road,
Wembley, Middlesex
LONDON - HA0 4YA
United Kingdom
CALL FOR AN APPOINTMENT
07404 261 999

# சர்வதேச தர ஆயுர்வேத அனுமதி பெற்ற
# தாய் மண்ணின் உற்பத்திகள்

LOTUS TODAY

வழங்கும்

## தினமும் சுகம் தரும் சூடான தேநீர்

### சர்க்கரை தொல்லையில் இருந்து விடுதலை

சிறு குறிஞ்சா
(Gymnema Sylvestra)



நாவல்
(Jamun Coffee)



பாகற்காய்
(Bitter Gaurd)



மாவிலை கொழுந்து
(Mango Leaf)



### அழுத்தம் சமநிலை பெற

செவ்வரத்தம் பூ
(Hibiscus)



### நல்ல நித்திரை மனம் உடல் அமைதி

துளசி
(Tulsi/Holy Basil)



### உடல் மெலிவதற்கு

கொரக்கா புளி / குடம் புளி
(Garcinia Cambogia)



### கொழுப்பு கரைய

ஆவாரம்பூ
(Cassia Senna Leaf)



கொய்யா கொழுந்து
(Guava Leaf)



### சக்தி வீரியம்

முருங்கை (Moringa)



நாவல் (Jamun Coffee)



**இயற்கை எமது நண்பன் - முன்னோர் நமது வழிகாட்டிகள்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
உங்கள் வீடுகளுக்கான டெலிவரியும் செய்து தரப்படும்

lotustoday.com, lotustoday.co.uk
hello@lotustoday.com
+442081337020, +447889665195, +447949173794

AYURVEDA CERTIFIED

## போராட்டங்கள் பொது எதிரணியின் அரசியல் கொள்கையாகவே காணப்படுகின்றது



தேசிய அரசாங்கம் நிலையான அபிவிருத்திகளை மாத்திரமே மேற்கொண்டுள்ளது. கடந்த அரசாங்கத்தினை போன்று அபிவிருத்தி என்ற பெயரில் போலியான அபிவிருத்திக்களை மேற்கொள்ளவில்லை எமது நிலைபேறான அபிவிருத்திக்கு மொரஹாகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்திக்களே எடுத்துக்காட்டாக காணப்படுகின்றது என்று தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிந்தனையின் கீழ் வயம்ப நீர்த்தேக்கத்தின் கட்டுமாணப்பணிகள் சென்றவாரம் ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் இடம் பெற்றது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்தி இலங்கையினை விவசாய தன்னிறைவுடைய நாடாக மாற்றுவதே எமது நோக்கம் என தெரிவித்தார். மகாவலி அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்தக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "தேசிய அரசாங்கம் இதுவரை காலமும் எவ்வித அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை என்று எதிர் தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர். அரசாங்கம் என்ன அபிவிருத்திகளை செய்துள்ளது என்ற விடயத்தை பயனடைந்த மக்கள் நன்கு அறிவார்கள். கடந்த அரசாங்கம் செய்ததை போன்று தேசிய அரசாங்கம் செய்யவில்லை என்ற விடயத்தை ஏற்றுக் கொள்ளவே வேண்டும் அனைத்து துறைகளிலும் ஊழல் மோசடிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

மொரஹாகந்த அபிவிருத்தி திட்டம் கடந்த அரசாங்கத்தில் இழுத்தடிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டமாகவே காணப்பட்டது இதன் காரணமாக பல விவசாய குடும்பங்கள் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர் குறுகிய காலக்கட்டத்தில் இவ்விரு பாரிய வியத்தகு அபிவிருத்தி திட்டங்களும் முழுமையாக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

அரசாங்கம் தேசிய உற்பத்தியினை இல்லாதொழிப்பதாக குறிப்பிடுபவர்கள் நாட்டு நடப்புக்கள் அறியாமலே கருத்துக்களை குறிப்பிட்டு வருகின்றனர். தேசிய உற்பத்திக்கள் பாரிய அளவில் முன்னேற்றமடைந்துள்ளது. கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. சுற்றுலாத்துறை பாரிய முன்னேற்றமடைந்துள்ளமையின் காரணமாக அந்நிய செலாவணி அதிகளிவில் கிடைக்கப் பெறுகிறது. சர்வதேசத்தின் அதிருப்தியை பெற்ற நாாக காணப்பட்ட இலங்கை இன்று அனைவரினதும் வரவேற்பை பெற்றுள்ளது இதுவே எமது பாரிய வெற்றியாகும். அரசாங்கத்தை கவிழ்ப்பதாக பொது எதிரணயினர் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். ஆனால் அவர்களின் போராட்டம் அரசாங்கத்திற்கு எவ்விதத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக உள்ள போராட்டம் எமக்கு ஒரு சவாலல்ல. போராட்டங்கள் பொது எதிரணியின் அரசியல் கொள்கையாகவே காணப்படுகின்றது என்றார்.

## விஜயகலா மகே'வரனுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும்



மேலும் சட்டமா அதிபர் அனுப்பியுள்ள அறிக்கையில், "விஜயகலா மகேஸ்வரன் எம்.பியின் கருத்து அரசியலமைப்புக்கு முரணானதா என்பது தொடர்பில் எந்தவொரு குறிப்பும் இடப்படவில்லை." ஆகவே இது தொடர்பிலும் சட்டமா அதிபரின் முடிவினையும் உடன் அறிவிக்குமாறும் சபாநாயகர் கோரியுள்ளார். இது தொடர்பான அறிவிப்பினை சட்டமா அதிபர் விரைவில் முன்வைக்க கூடும் என்று எதிர்பார்ப்பதாக சபாநாயகர் அலுவலகம் குறிப்பிட்டது.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு மீள் உருவாக வேண்டும் என யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் பிரதி அமைச்சரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்து பெரும் பரபரப்புக்கும், எதிர்ப்புக்கும் உள்ளானது. தெற்கு அரசியல் கட்சிகள் பெரும் எதிர்ப்புகளை வெளியிட்டன. இந்த கருத்து தொடர்பில் பாராளுமன்றத்திலும் சர்ச்சையான நிலைமை ஏற்பட்டதை அடுத்து இந்த கருத்து தொடர்பாக பொலிஸ் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையின் போது அமைச்சர்களான திலக் மாரப்பன, வஜிர அபேவர்தன, வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன், தமிழரசு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உட்பட பலரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. அத்தோடு விஜயகலா மகேஸ்வரன் எம்.பியிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இதனையடுத்து விசாரணை நிறைபெற்று பொலிஸ் தமது அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளித்தது.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இந் நிலையில் வாக்குமூலம் மற்றும் பொலிஸ் அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தனது தீர்மானத்தை அறிக்கையின் ஊடாக சபாநாயகரிடம் கையளித்துள்ளார். இந்த அறிக்கையின் பிரகாரம் முன்னாள் பிரதி அமைச்சரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விஜயகலா மகேஸ்வரனின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் நிலையியற் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் என சட்டமா அதிபர் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அறிவித்துள்ளார்.

எனினும் சட்டமா அதிபர் அனுப்பியுள்ள அறிக்கையில் விஜயகலா மகேஸ்வரன் எம்.பியின் கருத்து அரசியலமைப்புக்கு முரணானதா? இல்லையா? என்பது தொடர்பில் எந்தவொரு குறிப்பும் இடப்படவில்லை. இதனால் குறித்த கருத்து அரசியலமைப்புக்கு முரணானதா என உடன் அறிவிக்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய சட்டமா அதிபரிடம் கோரியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக சபாநாயகர் அலுவலக அதிகாரியொருவரிடம் வினவிய போது அவர் மேலும் கேசரிக்கு குறிப்பிடுகையில், "விஜயகலா மகேஸ்வரன் எம்.பியின் கருத்து அரசியலமைப்புக்கு முரணானதா? இல்லையா? என்பது தொடர்பில் எந்தவொரு குறிப்பும் இடப்படவில்லை. எனவே அரசியலமைப்பின் பிரகாரம் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து முரணாதா என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் முடிவின்ன சபாநாயகர் எதிர்பார்த்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பினை சட்டமா அதிபர் விரைவில் முன்வைக்க கூடும் என்று எதிர்பார்பார்கின்றோம். எவ்வாறாயினும் சட்டமா அதிபர் தற்போது வழங்கியுள்ள முடிவினை சபநாயகர் 23/08/2018 கூடவுள்ள பாராளுமன்றத்தில் அறிவிப்பார்." என்றார்.

## மஹிந்தவிற்கு மாத்திரம் அல்ல சந்திரிக்காவிற்கும் முடியாது



19ஆவது அரசியலமைப்பின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ விற்கு மாத்திரமல்ல சந்திரிகா பண்டார நாயக்கவிற்கு கூட 2020ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என தெரிவித்த அமைச்சர் துமிந்த திசாநாயக்க கூட்டு எதிர் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளை சீர் செய்வதற்கு பல்வேறு நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

மகாவலி அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொது எதிரணிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிளவினை சீர் செய்யவே மஹிந்த ராஜபக்ஷ அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்திற்கு முரணாக சட்டவியாக்கியானம் கோருகின்றார். எவ்வாறு இருப்பினும் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்த உருவாக்கிய 19ஆவது திருத்தத்திற்கு மஹிந்த கட்டுப்பட வேண்டும். இவர் மாத்திரம் விதிவிலக்கல்ல.

2020ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கூட்டு எதிரணியினர் தற்போதே தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பித்து விட்டனர். கோதாபாய ராஜபகஷ, பசில் ராஜபக்ஷ, சாமல் ராஜபக்ஷ போன்றோரை ஜனாதபதி வேட்பாளர்களாக களமிறக்குவதாக கூட்டு எதிரணிக்குள் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெற்றது.

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவரிடம் நாட்டை பொறுப்பாக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கோதபாயவிற்கு எதிர்ப்பு தெரிவிக்க மறுபுறம் சாமல் ராஜபக்ஷவிற்கு வாசுதேவநானயகார ஆதரவு வழங்குவதாக காணப்படுகின்றதை தொடர்ந்து கட்சிக்குள் காணப்படுகின்ற கருத்து வேறுப்பாடுகள் வெளிப்பட்டு விட்டது. பொது எதிரயினின் பிரதான நோக்கம் அரசாங்கத்தை வீழ்த்தி மீண்டும் குடும்ப ஆட்வியினை உருவாக்குவது ஆகும்.

மஹிந்தவின் குடும்ப உறுப்பினர்களை தவிர கட்சியின் பிறிதொரு உறுப்பினர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தகுதியற்றவர்களா? அல்லது மஹிந்த பிறிதொருவரை களமறக்க தயாரில்லையா? குடும்ப ஆட்சியினை தோற்றுவித்துதான் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பொது எதிரணியினர் காணப்படுவது அவர்களது இயலாமையினை வெளிப்படுத்துகின்றது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் பதவி மோகத்தின் காரணமாக மஹிந்த ஆட்சியை பெற பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த பின்னரும் 2015ஆம் ஆண்டும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டார். பின்னர் தேர்தலில் தோல்வியடைந்ததை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலிலும் படு தோல்வியடைந்து பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகின்றார். தற்போது 19ஆவது அரசியலமைப்பினை மீறி தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விடாதா என்ற நப்பாசையில் சட்ட வியாக்கியானம் கோருகின்றார்.


19ஆவது அரசியலமைப்பு மஹிந்த ராஜபக்ஷவிற்கு மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க, தற்போதைய ஜனாதபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஏற்புடையதாகவே காணப்படுகின்றது. மஹிந்த மாத்திரம் நாட்டுக்கு விதிவிலக்கல்ல மஹிந்தவும் கடந்த காலங்களில் மீண்டும் ஜனாதிபதி...

தொடர்ச்சி பக்கம் 16இல்....

பக்கம் 15இன் தொடர்ச்சி.... வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கவில்லை. அவர் குடும்ப ஆட்சியை உருவாக்குவதிலே தீவிரமாக காணப்பட்டார்.

தன் கட்சியில் வேட்பாளர் தொடர்பில் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கட்சியை பலவீனப்படுத்துமோ என்ற அச்சத்திலே அவர் ஜனாதிபதியாக போட்டியிடும் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் எவ்வாறு இருப்பினும் மஹிந்தவால் இனி ஒரு போதும் ஜனாதிபதியாக போட்டியிட முடியாது" என்றார்.

## உயர்தர பரீட்சை எழுதிய மாணவி கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு முல்லைத்தீவில் சம்பவம்



உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த மாணவியொருவரை வாகனமென்றில் கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய சம்பவமொன்று முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவின் பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரப் பரீட்சை எழுதிவரும் 19 வயதுடைய மாணவியை பளையைச் சேர்ந்த 22 வதுடைய இளைஞனொருவர் இளைஞர் குழுவினருடன் இணைந்து பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியை வாகனமொன்றில் கடத்தி சென்று பளைப்பகுதியில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு உடையார் கட்டுப்பகுதியில் கொண்டுவந்து இறக்கிவிட்டுள்ளனர். கலைப்பிரிவில் உயர்தர பரீட்சையில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த 19 வயதுடைய மாணவி நேற்றைய தினம் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை இளைஞர்கள் சிலர் சேர்ந்து வாகனம் ஒன்றில் குறித்த யுவதியை கடத்தி பளைப்பகுதிக்கு கொண்டு சென்றுள்ளார்கள் அங்கு குறித்த யுவதியின் விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மாணவி வீடு திரும்பாத நிலையில் கடந்த வாரம் மாணவியின் தாயார் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மாணவியைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில் கடத்தி பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டோர் சென்ற வாரம் குறித்த மாணவியை முல்லைத்தீவின் ஒரு இடத்தில் வாகனத்தில் கொண்டுசென்று இறக்கி விட்டுள்ளார்கள் இதையடுத்து மாணவி நடந்த சம்பவத்தினை தாயாரிடம் முறையிட்டுள்ளார். குறித்த மாணவியுடன் தாயார் பொலிஸ் நிலையம் சென்று நடந்த சம்பவத்தினை தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் கடத்திய இளைஞனை தேடி பளைப் பிரதேசத்திற்கு சென்று கடத்தல் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்த ஒரு இளைஞனை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவியை மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் கைது செய்யப்பட்ட இளைஞனை நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## பதவி பேராசையில் மஹிந்த : அரசியலமைப்பில் இடமில்லை என்கிறது ஐ.தே.க

மஹிந்த ராஜபக்ஷ 2015ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் மீண்டும் போட்டியிட முயற்சிப்பதானது பதவி மீதான அவரது பேராசையை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சி, நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தின் பிரகாரம் அதற்கான வாய்ப்புகள் எதுவும் கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதன் போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இந்துனில் துஷார கூறுகையில், "2020ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி எதிர்தரப்பு வேட்பாளர்கள் வரிசையில் ஆரம்பத்தில் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பசில் ராஜபக்ஷவின் பெயர் முன்வைக்கப்பட்டது. பின்னர் சமல் ராஜபக்ஷ என்று கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டி நிலை ராஜபக்ஷ குடும்பத்தில் காணப்பட்டது. இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்கும் எண்ணப்பாடுகள் எழுந்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் மீண்டும் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி வேட்பாளராக நிட்க விரும்புவது அவர் பதவியின் மேல் கொண்ட ஆசையினாலாகும். முப்பது வருட கால போர் சூழலை நிறைவுக்கு கொண்டு வந்ததன் பின் தனது ஜனாதிபதி பதவியிலிருந்து படிபடியாக கீழிறங்கி மீண்டும் அப் பதவிக்கு போட்டியிட விரும்புவது வீண் முயற்சியாகும்.

பதவியினை கைமாற்றுவதற்கு விருப்பமின்மையினாலும், தனது கௌரவத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவுமே மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க எண்ணியுள்ளார். ராஜபக்ஷ குடும்பத்தினரின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும் என்ற பயத்தின் காரணமாகவே சகோதரர்களின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது என்ற காரணத்தினாலேயே மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாக வேட்பாளராக களமிரங்கியுள்ளார்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


மறு புறம் இது புதிய புதிய திட்டங்களையும், கருத்தக்களையும் முன்வைத்து தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக எதிர்தரப்பினர் மேற்கொள்ளும் புதிய முயற்சியாகவே இதனையும் கருத வேண்டியதாகவுள்ளது. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போதும் முன்னாள் ஜனாதிபதி பிரதமராகும் எண்ணத்தினைக்கொண்டே மக்களிடம் வாக்குகளை திரட்டிக்கொண்டார். ஆனால் பிரதமாராகும் கனவு வெற்றியளிக்கவில்லை, இந் நிலையில் கடந்த நாட்களில் எதிர்கட்சி தலைவர் பதவியை பெற்றக்கொள்வதற்கு கூட்டு எதிரணியினர் முயற்சித்து வந்தனர். அதுவும் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தது. அகவே அரசியலில் நிலையக இருக்கும் நோக்கத்தினைக் கொண்டு புதிய புதிய கருத்துக்களை தோற்றுவித்து மக்களின் பார்வையை தனது பக்கம் திருப்பும் முயற்சியாகவும் இதனைக்கொள்ளலாம்.

மேலும் 19 ஆம் அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தின் படி ஜனாதிபதியொருவர் ஐந்து வருடங்களே பதவியிலிருக்கலாம். அரசியல் அமைப்பு உறுதியாகவும் பலமிக்கதாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுவதற்கான நீதிகளை கேட்பதற்கு முன்னாள் ஜனாதிபதி முற்படுவது கூட்டு எதிரணியினரின் மத்தியில் பரப்பரப்பினை ஏற்படுத்துவதனூடாக பிரச்சினையை ஏற்படுத்துவதற்காகவும். ஊடகவியலாளர் கீத் நொயார் மீதான தாக்குதல் தொடர்பான பொலிஸாரின் விசாரணையின் போதும் தெரியாது, கண்டதில்லை, அறியவில்லை போன்ற பொறுப்பற்ற பதில்களையே முன்வைத்திருந்தார். இவ்வாறு பத்து வருடங்களுக்கு முன்னர் நடந்தது நினைவில்லாத ஒருவர் எதிர்கால தலைவறாக இருக்கமுடியும். இவரின் ஆட்சிகாலத்திலேயே 30 வரையிலான ஊடக்வியலாளர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஊடகங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளுதல், ஊடகவியலாளர்களை கடத்துதல் அச்சுருத்தல் வழங்குதல் போன்ற நிலைகள் இன்று இல்லாது செய்யப்பட்டுள்ளன.

கடந்த அரசாஙகத்தில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்ப்பட்ட அநீதிகள் தொடர்பான விபரங்கள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதற்கான சுதந்திரத்தை நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தி கொடுத்துள்ளது. தகுந்த ஆதாரங்களை கடந்த அரசாங்கத்தினர் முன்வைக்காவிட்டால் ஊடகவியலாளர்கள் இது குறித்த கவனம் செலுத்துவதுடன் இன்மேலும் அதுபோன்ற சம்பங்கள் இடம்பெறாத வகையில் தமது உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பிரதமரை வேட்பாளறாக நிறுத்துவோம். ஆனால் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்விடயம் குறித்து எதுவும் முன்வைக்கவில்லை. தகுந்த காலம் வரும் போது ஐக்கிய தேசிய கட்சி சார்பில் தகுதியான ஒருவரை வேட்பாளராக நிறுத்துவோம்." என்றார்.

## முன்னாள் போராளிகளுக்கு பட்டதாரி நியமனம் வழங்கப்பட்டமை சமாதானத்திற்கான அறிகுறி - வடக்கு ஆளுநர்



புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 30 பேருக்கு பட்டதாரி நியமனம் வழங்கப்பட்டமை சமாதானத்திற்கு ஒரு முன்னேற்றகரமான சம்பவமாக அமைக்கின்றது என வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். புலிகள் அமைப்பிலிருந்து இறுதிக் யுத்தத்தில் சரணடைந்த போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் தமது உறவினர்களுடன் இணைந்துகொண்டனர்.

அவர்களில் பட்டதாரிகளாகக் காணப்பட்ட பலர் கடந்த 2017 ஆரம்பத்தில் சுண்டுக்குளியில் அமைந்துள்ள எனது அலுவலகத்தில் என்னை சந்தித்து ஒரு கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். அதாவது பட்டதாரிகளுக்கான அரச பணிநியமனங்களில் தமது பெயர்களும்உள்வாங்கப்படவேண்டும் என்பதாகும்.

அதற்கு அமைய கடந்த 2017.07.26 அன்று அமைச்சர் சுவாமிநாதனுக்கு நான் எழுத்து மூலம் முன்வைத்த ஆலோசனையினை ஏற்றுகௌரவ அமைச்சர் அமைச்சரவைபத்திரத்தினை முன்வைத்து நிறைவேற்றி இப்போராளிகளுக்கும் நேற்று அரச பணி நியமனத்தினை வழங்கியிருக்கின்றார். அவருக்கும் எனதுமனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கனவே கடந்த வருடம் 35 புனர்வாழ்வு பெற்ற போராளிகள் பட்டதாரிகள் நியமனத்தில் உள்வாங்கப்பட்டு அரசபணிக்கு அமர்த்தப்பட்டார்கள்.

மேலும் இரண்டாம் கட்டமாக நேற்றைய தினம் 30 புனர்வாழ்வு பெற்ற போராளிகள் அரசபணிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். சமாதானத்திற்கு இது ஒருமுன்னேற்றகரமான சம்பவமாக அமைக்கின்றது. இதுபோன்று மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசசேவைகள் கிடைக்க எனது முழு ஒத்துழைப்பினையும் வழங்கவுள்ளதாகதெரிவித்துள்ளார். புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கான அரச நியமனங்கள் அலரிமாளிகையில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Meals, Snacks, Sweets & Savouries
Take Away
**Wada Express**
38 South Parade, Mollison Way, Edgware, Middx HA8 5QL
020 8952 4238 / 020 8952 2865
www.wadaxpress.com

**38 South Parade, Mollison Way, Edgware HA8 5QL**

கடந்த 9 வருடங்களுக்கு மேலாக சுவையான,
தரமான இலங்கை தென்னிந்திய உணவு வகைகளை
வழங்குவதில் பெருமை கொள்ளும் ஒரே நிறுவனம்
Wada Express in Edgware

WE ARE SPECIALISED IN CATERING FOR ALL OCCASIONS & EVENTS





# IT'S NEVER TOO LATE TO LEARN A NEW SKILL

pitman® training

**Hands-on training to take your skills and career to the next level**

Enrol NOW for a Pitman Training Diploma and you'll be able to start a new career and earn a good salary without building up big debts!

**Pitman Courses and Diplomas**

- Sage 50 Accounts 2017
- Sage 50 Payroll RTI
- ECDL
- Microsoft Office Courses
- Typaz - Touch Typing
- AAT Accounting - Level 2 & Level 3
- Web & Graphic Design Training
- Legal / Medical Secretary
- Social Media Marketing Training
- Business Management
- IT Support Training - CCNA, MCSE

All our courses can lead to a rewarding and well-paid careers

**CACHE Childcare Courses**



cache
for the Children and Young People's Workforce

- Childcare Level 2 Certificate
- Childcare Level 3 Diploma

**Teaching Assistant Level 2 Course**

**GCSE English Language & Literature Tuition**

- ESOL Entry 3 (B1) Exam Preparation Classes
- Cambridge ESOL English Classes
- IELTS Exam Preparation
- PCO Licence - Mini Cab English Exam Preparation and Tests
- Food Hygiene / Health and Safety Training
- Driving Theory Test Preparation Classes
- Personal Licence (Off Licence) Exam Preparation

**Life in the UK**

- Practice more than 1000+ Questions
- NEW - History Questions
- Language support for all our students
- Immigration consultancy support for students



- Impress employers with high level skills
- Qualify quickly with flexible learning
- Get the job you want and earn while you learn

Call us now for FREE and friendly one-to-one career advice

Microsoft® IT Academy Program Member | CompTIA Authorized Partner | cache nurturing achievement | bcs Registered Course Provider | CompTIA A+

**Pitman Training Wembley 020 8903 9580**

Web: pitman-training.com/wembley Email: wembley@pitman-training.net
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL

# பார்வை

PARVAI

INSEIN Tamil Newsletter/ அறிவியல் வழிகாட்டி

## பார்வையின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அந்தித் தமிழ் அரங்கம்

**பார்வையின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் மொழி, தமிழ் கலை கலாச்சாரத்தை முன்னிலைப்படுத்தி இதன் வாசகர்களுடனும், வர்த்தக ஆதரவாளர்களுடனும், பார்வையின் அபிமானிகளுடனும் அந்தித் தமிழ் அரங்கம் இடம் பெறவுள்ளது.**

### சிறந்த பாடகர்கள் தெரிவுப் போட்டி

இப்போட்டி நிகழ்ச்சியில் நான்கு (4) பிரிவுகளாக பாடும் போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம்.
வயதுப் பிரிவு அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்படும்.

- 18 வயதிற்கு உட்பட்டவர்கள் தனித்தனியாக இருபாலாரும் கலந்து கொள்ளலாம்
- 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தனித்தனியாக இருபாலாரும் கலந்து கொள்ளலாம்
- 18 வயதிற்கு உட்பட்டவர்கள் ஜோடியாக இருபாலாரும் கலந்து கொள்ளலாம்
- 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஜோடியாக இருபாலாரும் கலந்து கொள்ளலாம்

### சிறந்த நாட்டிய மாணவி தெரிவுப் போட்டி

இந்நிகழ்வில் இரண்டு அல்லது மூன்று மாணவிகள் இணைந்து குழு நடனம் ஆடலாம். இதற்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. இப்போட்டி நிகழ்வில் வெற்றி பெறும் முதல் மூன்று மாணவிக் குழுவினரை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் கௌரவித்து அதற்கான பதக்கம், சான்றிதழ், பரிசுகள் வழங்கவுள்ளார்கள்.

INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE · ESTD · 1974

### ராஜாவுடன் ஒரு நிமிடம்

பிரான்ஸ் ரீ ஆர் ரீ (TRT) சிரேஷ்ட அறிப்பாளர் ஏ. எஸ் ராஜாவுடன் ஒரு நிமிடம் தமிழில் உரையடி வெற்றிபெறும் போட்டி.

**காலம் : Sat, 24 Nov 2018 | நேரம் : 3.00pm - 10.30pm**
**இடம் : நட்சத்திர மண்டபம் - Feltham**

தாயக உணவு வகைகளையும் அதற்கான சுவையுடன் உண்டு மகிழலாம்.

**CONTACT**
**Mrs. றஜனா : 0208 900 9090 OR 0208 900 90 52**

தமிழ் மொழி, கலை. கலாச்சாரம் என்பனவற்றை அடிப்படையாகவும் தமிழ் மக்களின் விடுதலையை முன்னுரிமைப்படுத்தியும், வெளிவரும் பார்வை செய்தி இதழ் மேன்மேலும் தனது சேவைத் தொடர எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களுடன் எங்களுடைய ஆதரவையும் இத்தால் வழங்குகின்றோம்.

SPONSORS

SMART money GLOBAL EXCHANGE LTD

CREDIT & FINANCE LTD — Credit and Finance

SCHELIAN LAW SOLICITORS COMMISSIONERS FOR OATHS

Ganapathy Cash and Carry

KRISHNA CASH & CARRY

CATERING
5% OFF FOR
OVER 100 PERSONS

# GANA

SRI LANKAN & SOUTH INDIAN FINE DINING

SPECIAL OFFER
10% OFF FOR LUNCH
MONDAY TO THURSDAY

## தரமான பலவகை உணவிற்கும் நாடுங்கள்



FINE DINING | தாயக உணவு வகைகள் அனைத்தையும் சுடச் சுட உங்கள் சுவைக்கேற்ப உடனுக்குடன் சமைத்தும், தயாரித்தும் தருகிறார்கள் கனா உணவகம்.




**EVENT CATERING SERVICE**

உங்களுடைய அனைத்து நிகழ்வுகளுக்கும் தேவைப்படும் உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப நீங்கள் விரும்பும் இடத்திற்கு கொண்டுவந்து தரப்படும்.

**SPECIAL OCCASIONS**

Birthday Celebrations | Receptions | Parties
We can accommodate up to 100 guests.

## GANA

Srilankan & Indian Restaurant
13, Village Way East,
Harrow, Middlesex, HA2 7LX
www.ganarestaurant.co.uk

CALL NOW
020 8429 8447




# WE HAVE SPECIAL OFFERS FOR
# PORTFOLIO LANDLORDS

Greenfinch
Estate Agents

49, NORTH ROAD SOUTHALL, MIDDLESEX, UB1 2JL
TEL: 020 8867 9696
EMAIL: VINO@GREENFINCHESTATE.CO.UK
WEB: WWW.GREENFINCHESTATE.CO.UK

# KRISHNA CASH & CARRY

## BUY ONE GET ONE FREE

Idhayam Gingelly Oil 1l - £5.99
Shankar Gingelly Oil 750ml - £4.99
Nestomalt 400g - £4.99
Kings Curry Powder 900g - £11.00

Laxmi Gingelly Oil 750ml - £4.99
Natco Red Lentils 2kg - £3.99
BTM Jack Mackerel 300g - £2.99
Surya Curry Powder 500g - £7.49

## SPECIAL PRICE

Red Lentils 2kg - 3 For £5.00
Black Eye Beans 1.5kg - 3 For £5.00
Red Kidney Beans 1.5kg - 3 For £5.00
Split Toor Dal (Oily) 1.5kg - 3 For £5.00
Split Toor Dal (Un Oily) 1.5kg - 3 For £5.00




### MAGGI

Maggi Noodles - 5 For £1.00
Maggi Coconut Milk 1kg - £7.49




### RICE

Tilda Basmati 20kg - £31.99
Akash Basmati 20kg - £25.99
Lila Basmati 20kg - £24.99
India Queen Ruby 10kg - £12.99
Double Horse 10kg - £9.99
Shankar Ponni 10kg - £9.99
Shankar Sona Masuri 10kg - £9.99
Shankar Idly Rice 10kg - £9.99



### FISH

Karuppu Thirali - £7.99/kg
Sura - £7.99/kg
Vilamin - £7.99/kg
Thirukkai - £7.99/kg
Sea Bass - £7.99/kg
Nandu - £8.99
Kanavai - £8.99
Ora - £7.99
Soodai - £3.99
Frozen Fishes (Mix and Match) – 2 For £5.50

### MEAT

Baby Chicken Each £2.50 - 3 For £6.99
Chicken Thigh - 3.99/kg
Chicken Breast - 4.99/kg
Chicken Legs - £1.99/kg
Mutton Shoulder - £7.49/kg
Lamb Shoulder - £8.99/kg



### VEGETABLES

Small Onion - £2.99/kg
Drumstick - £2.99/kg
Srilankan Aubergine - £2.99/kg
Keerai vakaikal – 3.99/kg



KRISHNA
FRESHNESS - VALUE - CHOICE

704-708 Uxbridge Road, UB4 0RX London. Tel: 0208 848 1250

The above trademark products are available

# Krishna
RESTAURANT

**700 Uxbridge Road Hayes Greater London UB4 ORX**
**www.krishnarestaurantlondon.co.uk/ Email: infokrishnarestaurant@mail.**






















## Krishna Private Catering

உங்களுடைய எதிர்காலத் விருந்துபசார நிகழ்வுகளை முன்கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு தரமான முறையில் ஒழுங்கு செய்யலாம்.

எம்மிடம் 10 முதல் 200 வரையிலான ஆசனங்களை ஒரே தடவையில் ஏற்பாடு செய்யலாம். நீங்கள் வேறு மண்டபங்களில் விருந்துபசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்யதால் உங்கள் தேவைக்கேற்ப 500–1500 பேருக்குத் போதுமான உணவு வகைகளை உங்கள் தேவைக்கேற்ப தரமாகவும் சுவையாகவும் சமைத்துத் தருவோம்.

திங்கள் முதல் வெள்ளக்கிழமை வரை 15 பேருக்கு மேற்பட்ட குழுவிற்கு தேவையான மதிய போசனத்தை அல்லது இராப் போசனத்தை முன்கூட்டியே பதிவு செய்தால் 10% கழிவு வழங்கப்படும்.

கிறிஷ்னா உணவகம் - கிறிஷ்னா **(KRISHNA CASH & CARRY)** மளிகைக் கடைக்கு அருகாமையில் உள்ளது.

# அரவணைப்பகம்

## ARAVANAIPPAKAM

## රැකවරණය



சிதம்பரம், கள்ளிக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தை.

Sithamparam, Kallikkulam, Nochchimoddai, Omanthai.

அரவணைப்பகம் ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகளினால் உருவாக்கப்பட்ட நல்லெண்ணக் கருத்துக்களைக் கொண்டு 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பப் பணிகள் ஓரளவு நிறைவு பெற்றுள்ளது. அதாவது பெரிய ஓர் நிலப்பரப்பைச் சொந்தமாக அதற்கான விலை கொடுத்துப்பெற்றுள்ளார்கள். தற்பொழுது அந்த நிலத்தில் ஓர் குடிசை அமைக்கப்பட்டு ஓர் சிறிய இளம் குடும்பம் ஒன்றை காவலுக்காக குடிவைத்துள்ளார்கள்.

ஆதரவற்ற எம்மவர்களுக்கு தங்குமிட வசதிகள் அமைந்த கட்டடத்தை அவர்கள் அமைக்க முன்வந்துள்ளார்கள். புலம் பெயர் மக்களாகிய நாங்கள் மனம் உவந்து வழங்கும் பொருளாதார உதவி அந்த இல்லத்தில் குடியிருக்க விண்ணப்பித்தவர்களை குடியமர்த்தி ஆதரிக்க, பெரு மனது படைத்த கருணையுள்ளங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீங்கள் உங்களுடைய நிதிப் பங்களிப்பை பார்வை நிறுவனத்திற்கு ஊடாகவோ அல்லது நேரடியாக அவர்களின் வவுனியா வங்கிற்கோ அனுப்பிவைக்க பார்வை நிறுவனத்தினர் ஆவன செய்துதருவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.




**இப்பணியின் புகைப்படங்கள் அடுத்தடுத்த இதழ்களில் வெளியிடப்படும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும், நீங்கள் பார்வை நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் அழையுங்கள்:**

**இலண்டனில் 0790 843 7921**

insein.pri@gmail.com







# எம் கேள்வியும் உங்கள் பதிலும்

1] பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளபட-வுள்ள ஆர்ப்பாட்ட பேரணிக்கு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2] முல்லைத்தீவு விநாயகபுரம் பகுதியில் யுத்தம் காரணமாக சேதமடைந்த அரிசியாலை கையளிக்கப்-பட்டுள்ளபோதும், கடந்த ஆறு ஆண்டுகளாக செயலிழந்து காணப்படுகின்றது.

3] இலங்கை வந்துள்ள ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

4] தாக்குதல் நடத்திய கும்பலின் இலக்கு வைத்தியரின் வீட்டுக்கு அண்மையாக உள்ள வாள்வெட்டுச் சந்தேகநபர் ஒருவரின் வீடாகும்.

5] எங்களின் உரித்துக்களை எம்மிடம் தந்து விட்டு அவ்வாறான உதவிகளை செய்தாலாவது நாம் அவர்களுடன் பேச முடியும். சி.வி.விக்னேஸ்வரன்

6] முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்ட வாக்குமூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

7] ஊடவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டமை தொடர்பில் மஹிந்தவிடம் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது.

8] வடக்கு- கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் உள்ளிட்ட, 500 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளது.

9] யாழ். மாவட்டத்தில் அச்சுவேலி, மயிலிட்டி வடக்கு, கிளாலி, பளை, முகமாலைப் பகுதிகளிலும் உள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

10] காட்டு யானைகளால் பாதிக்கப்படும் மக்களை-ப்பாதுகாக்க முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இரா.சம்பந்தன்.

11] திருகோணமலைக்கு வருகைதந்திருந்த அமைச்சர் பீல்மார்சல் சரத்பொன்சேகாவிடமே காட்டு யானைக-ளின் அச்சுறுத்தல் கோரிக்கையை இரா.சம்பந்தன்

12] விரைவில் மாவட்டத்தில் பாதிக்கப்படும் இடங்களில் யானைவேலிகளை அமைக்க அமைச்சு நிதிகளை ஒதுக்கி நடவடிக்கை எடுக்கவேண்டும். இரா.சம்பந்தன்

13] திருகோணமலைக்கு அழகைத்தருவது நகரிலும் கோணேசர்கோயில் பகுதியிலும் வாழும் மான்கள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை.

14] இந்த வருடம் முடிவதற்குள் தேசிய ரீதியில் யானைகளின் அச்சுறுத்தலுக்கு 90 வீதமான தீர்வு காணப்படும். பீல்மார்சல் சரத்.

15] யுத்த காலத்தில் இங்கிருந்த பல்லாயிரக்-கணக்கான தமிழர்கள் விரட்டப்பட்டு முல்லைத்-தீவு முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டி-ற்குள் கொண்டுவரப்பட்டது.

16] வடக்கு-கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டிக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் யுத்தகாலத்தில் பின்தள்ளப்பட்டிருந்தது.

17] மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களை கொண்டுசெல்வதன் மூலம் அங்குள்ள தமிழ் மக்-களை விரட்டியடித்தது.

18] சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இவ்வரசாங்கமும் நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற பிரதேசங்களில் மேற்கொண்டு வருகிறது.

19] சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாடாளுமன்றத்தினூடாகவும், சர்வதேச சமூகத்-தினூடாகவும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் த. தே. கூட்டமைப்பிற்கு உண்டு.

20] பௌத்த மதத்தை பலவீனப்படுத்தாமல் நவீன தொழில்நுட்ப யுகத்திலும் பௌத்த தர்மத்தை பாதுகாத்து முன்கொண்டு செல்வோம். - பிரதமர் ரணில்.

## பதிலை நீங்கள் எழுதவும்

1] எங்கு நிர்மாணிக்கப்பட்டு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்-திடம் கையளிக்கப்பட்டுள்ள அரிசியாலை செயலிழந்தது-ள்ளது?

2] எங்கு வைத்தியர் வீடு அடையாளம் தவறி தாக்கப்-பட்டு ள்ளமை விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்-தப்பட்டுள்ளது?

3] எங்கு ஐ. தே. கட்சியின் பெண் உறுப்பினரொருவரின் வீட்டில் கொள்ளையர்கள் பணம் மற்றும் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்?

4] எதற்கான வயதெல்லையை 35 ஆக நிர்ணயிக்க போக்குவரத்து அமைச்சு வழங்கிய யோசனையை ஜனாதிபதி நிராகரித்தார்?

5] எங்கு வாழும் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்-தல் காரணமாக அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்?

6] எங்கு நடந்த வனவிலங்குகள் பாதுகாப்பு அவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார்?

7] எங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு முரணானவை?

8] எது இணைந்த தமிழர்களின் தாயகக் கோரிக்கையை இல்லாமல் செய்வதே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது?

9] எதில் ஈடுபட்டிருக்கும் சிங்கள மீனவர்களுக்கு அரச உதவிகளும் இராணுவ ஆதரவுகளும் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன?

10] எதன் அறிமுக உரையிலேயே வடக்கு-கிழக்கு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

இதில் 23, 24 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

## கடந்த இதழின் 14/2018 - 23ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 1] சரி | 11] சரி | 1] முல்லைத்தீவு |
| 2] சரி | 12] சரி | 2] எதிரக்கட்சி தலைவர் |
| 3] சரி | 13] சரி | 3] மன்னார் |
| 4] சரி | 14] சரி | 4] காணாமல் போனோர் அலுவலகம் |
| 5] சரி | 15] சரி | 5] தமிழ் தலைமைகள் |
| 6] சரி | 16] சரி | 6] தினேஷ் குணவர்தனவை |
| 7] சரி | 17] சரி | 7] இளைஞர்களை |
| 8] சரி | 18] சரி | 8] சிவில் பாதுகாப்பு குழுவினர் |
| 9] சரி | 19] சரி | 9] அமெரிக்க இராணுவ உறுப்பினர்கள் |
| 10] சரி | 20] சரி | 10] நிறைவேறாத |

## கடந்த இதழின் 15/2018 - 6ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] தமிழகத்தில்

2] பழங்குடி

3] நல்ல தொழில்

4] விவசாயத்தில்

5] கோயம்புத்தூர்

6] தமிழ் மற்றும் தென்னிந்திய மொழிகளில்

7] இந்தியாவில்

8] வெளிநாட்டு நேரடி

முழுப்பெயர் : ____________________

தொலைத் தொடர்பு இல : ____________________

தபால் குறியீடு (post code) : ____________________

Please return to our address

# மொழிபெயர்ப்பு பரிசுப்போட்டி

## தமிழ் வாக்கியத்தை வாசித்து ஆங்கில மொழிக்கு மாற்றுக

1] அரசியலமைப்பின் பிரகாரம் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மஹிந்த ராஜபக்ஷவினால் முடியாது.

2] ஜீ.எல்.பிரிஸ் தான் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேண்டும் என யோசனை முன்வைத்தார்.

3] இலங்கையில் தமிழர்கள் ஜனநாயக ரீதியாக சமவுரிமையுடன் வாழ வேண்டியவர்கள். சி.வி.விக்னேஸ்வரன்

4] வடமகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாடுகளின் பிரதிநிதிகளிற்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

5] தனியார் காணிகளில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு நகர்த்தி, டிசம்பர் மாதத்துக்கு முன்னதாக விடுவிக்கப்படவுள்ளது

6] இராணுவ முகாம்களை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக நடந்த கூட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

7] கிராமமக்கள் வனவிலங்ககளால் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் கிராமங்களைச் சார்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

8] மான்களின் பிரச்சனைகளைப்பொறுத்தவரை அவற்றிக்கான காணி குறைந்தது 25 ஏக்கராவது தேவை ஏற்படும்.

9] யுத்தம் முடிந்ததற்குப் பின்னர், தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்த காணிகளை நிரந்தரமாக சிங்கள மக்களுக்கு அரசாங்கம் வழங்கியது.

10] முல்லைத்தீவில் தமிழ்ப் பெயரான மணலாறு என்பது வெலிஓயா என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## ஆங்கில வாக்கியத்தை தமிழ் மொழிக்கு மாற்றுக

1] A lowest wage receiver in the public sector will get a basic salary of Rs. 28,000 by year 2020. - Home Affairs Minister.

2] Minister Abeywardena told new development officers to assist the giant development leap that the government is taking now.

3] Former President Mahinda informed the CID that he could not remember a journalist called Keith Noyarh at the time of the alleged assault incident.

4] The magisterial inquiry into the assault and abduction of journalist Keith Noyarh came up before Mount Lavinia Additional Magistrate.

5] Additional Magistrate ordered to extend the remand of former Military Intelligence Head Retired Major General Amal Karunasekara till August 27.

6] They questioned me how I received information regarding an article published under the heading of "Senpathi" on the suicide bomb blast.

7] He was not forced to make a statement to the Police on the abduction and assault of journalist Keith Noyarh.

8] The Speaker insisted that he did not make the statement with any malicious intent towards anyone.

9] The Speaker's Media Unit said Jayasuriya had decided to issue the statement after seeing several media reports.

10] The minister was speaking at a meeting to discuss the progress of the ministry's projects in the area.

## தமிழ் நாடு பற்றிய கேள்விகள்

1] எங்கு ஆட்சி மொழி தமிழ் ஆகவும் ஆங்கிலமும் அலுவல் மொழியாகப் பயன்படுகிறது?

2] யாரின் பண்பாட்டில் தமிழ் மொழி மிக இன்றியமையாத இடத்தை வகிக்கிறது?

3] சங்க இலக்கியங்கள் எனப்படும் தமிழின் மிகப் பழமையான இலக்கியங்கள் யாவும் எந்த வடிவில் இயற்றப்பட்டவையாகும்?

4] தொன்மைக் காலம் முதலே இலக்கியம் மட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்ட மொழி எந்த மொழியாகும்?

5] உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள எந்த அறநூல் தமிழின் மிகச் சிறந்த நீதிநூல் ஆகும்?

6] நாடு, மொழி, இனம் கடந்து உலக மக்கள் யாவருக்கும் பொதுவான நீதியைக் கூறுவதால் எது உலகப் பொதுமறையெனப் போற்றப்படுகிறது?

7] எதன் இலக்கியங்களிலிருந்து தமிழ் மக்களின் தலைசிறந்த பண்பாடு, வாழ்க்கை முறை போன்ற கூறுகளை நாம் அறியமுடிகிறது?

8] தமிழகத்தின் முதல் அச்சுக்கூடம் எங்கு 1578இல் போர்த்துகீசியரால் நிறுவப்பட்டது?

## கடந்த இதழின் 15/2018 - 24ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] There are so many projects available to promote with the power of Chief Minister.

2] The fishermen have also been effected in on going war period in Mullaitivu District.

3] We should not be a society to feed for the planned rational activities in the country.

4] Finding the human born bring out many facts of the truth when we have deep dig at the entrance of Mannar Town.

5] The racist problem must find a solution through peace life among Tamil Muslim people in North & East.

6] The new commercial building complex has been built in an expense of 64 million in Polonaruwa town.

7] The court of Mallakam has ordered to the arrested 7 youths in Chavakachcheri to be remanded for 14 days

8] The people become fired because the terrible incidents happen in most parts of Jaffna. Government Agent Vethanayagan.

9] The Pacific anchel is yearly happing occasion to the joint humanitarian support and deep relief activities.

10] The different exchange of professional experts are included in the deep relief activities.

1] ஆயுதபடை மக்களை அடக்கி ஆளவோ அல்லது யாராவது நாட்டைப்பிளவுபடுத்தவோ தற்போதைய அரசாங்கம் அனுமதிக்கமாட்டாது. ஜெனாதிபதி சிறிசேன.

2] எதிர்காலத்திலும் நாட்டைப்பிளவுபடுத்த யாரையும் அனுமதிக்கமுடியாது ஜெனாதிபதி சிறிசேன

3] சர்வதேச அழுத்தங்களிலிருந்து போர் வீரர்களை பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஜெனாதிபதி சிறிசேன

4] பணப் பரிமாற்றுச் சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷவிற்கும் வேறு ஐவருக்கும் எதிரான வழக்கு மேலதிக விசாரணை செப்ரம்பர் 11க்கு போடப்பட்டுள்ளது.

5] குற்றம் சாட்டப்பட்ட ஆறு குற்றவாளிகளுக்கும் பணப் பரிமாற்றம் சம்மந்தப்பட்ட அவர்களுக்கான குற்றச்சாட்டை சட்டமா அதிபர் தாக்குதல் செய்துள்ளார்.

6] 1000cc க்கு குறைவான வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட வரி ஓர் நடவடிக்கையாகும் என நிதி அமைச்சர் மங்கள சொன்னார்.

7] வீதிகள் வெகு விரைவில் குவிந்து கிடப்பதும் இறக்குமதிகள் கட்டுப்பாட்டுச் சுற்றை மீறியுள்ளது.

8] கலந்து செயற்படும் வாகனங்கள் உட்பட 1000cc க்கு குறைவான வாகனங்களுக்கு உள்நாட்டு உற்பத்தி வரியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளாக வர்த்தகமானியில் அறிவிக்க அமைச்சர் கையொப்பம் இட்டுள்ளார்.

9] 01.08.2018 முன்னதாக திறக்கப்படும் கடன் கடிதத்திற்கு வாகனத்திற்கான புது வரிகள் செல்லுபடியாகாது.

10] மத்தள விமான நிலைய ஒப்பந்தத்திற்கு முனையும் பொழுது அதிகூடிய தெளிவுடன் செயற்படுவதுடன் அரசாங்கம் விற்கமாட்டாது.

## மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கு அரசியலமைப்பில் எந்தவித தடையும் இல்லை



நடைமுறையில் காணப்படுகின்ற அரசியலமைப்பு முறைக்கமைய, ஜனாதிபதிகளாக பதவி வகித்தவர்களுக்கு மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கு அரசியலமைப்பில் எந்தவித தடையும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். நுவரெலியாவில் இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடுவது தொடர்பில் மீண்டும் குறித்த பிரச்சினை எழுந்துள்ளது. நாட்டில் ஜனாதிபதி பதவிக்காலம் குறித்த வரலாற்றை நோக்குமிடத்து, புதிதாக கொண்டுவரப்பட்ட 19ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் மாற்றியமைக்கப்பட்ட சீர்திருத்தத்திற்கமைய ஒரு ஜனாதிபதியின் பதவிகாலம் 5வருடங்கள் என தெரிவிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அமைவாகவேயே முன்னாள் ஜனாதிபதியான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். அன்று ஜனாதிபதி பிரதமர் உட்பட அரச தரப்பில் அனைத்து பதவிகளுக்கும் நபர்களை நியமிக்கும் பொறுப்பு கொண்டிருந்ததோடு, அரசியலமைப்பினூடாக நாடாளுமன்றுக்கு பொறுப்பு கூற வேண்டிய தேவை இன்மை மற்றும் நாடாளுமன்றத்தினைகளைக்க என பலங்கள் கொண்டிருந்தார்.

எனினும் நடைமுறையிலுள்ள ஜனாதிபதிக்கு அவ்வாறான பலங்கள் இல்லை. 19ஆம் அரசியலமைப்பின் கீழ் நாட்டின் ஜனாதிபதியாகும் நபர் மீண்டும் இரண்டாவது முறையாக பதவியிலிருக்க முடியாது என 31ஆவது பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய பிரிவில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அன்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ பெற்ற ஜனாதிபதி பதவியும் இன்று மைத்திரிபால சிறிசேன பெற்ற பதவியும் வேறானதாகும்.

அதனை மிகத் தெளிவாக பார்த்து தெரிந்துக் கொள்ளுமிடத்து தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு தேவையாயின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ நடைமுறையிலுள்ள ஜனாதிபதி பதவிக்கு தேர்தலில் போட்டியிடலாம்.

நாட்டில் ஒரு சிலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு வாக்குகளை வழங்கவும் சிலர் மஹிந்தவுக்கு வாக்குகளை வழங்கவும் தயாராகவேயே உள்ளனர். இந்நிலையில் நாட்டில் வாக்குரிமையுள்ள அனைத்து மக்களும் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று தமது பிரதான மனித உரிமைகள் தொடர்பில் வித்தியாசமொன்றினை பெற வேண்டும் என நாம் நம்புகின்றோம். நாட்டில் 35 வயதிற்கு மேலானவர்கள் மாத்திரமே முச்சக்கரவண்டிகளை செலுத்த முடியும் என கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானமானது நாட்டின் இளைஞர்களுக்கு மேற்கொள்ளும் அசாதாரணமான விடயமாகும்.

நான் திறன்கள் அபிவிருத்தி அமைச்சராக கடமையாற்றிய போது முச்சக்கர வண்டி ஓட்டுநனர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி தச்சாளர், மின்னியல் வல்லுனர், மற்றும் நீர்பொறியியலாளர் என வேலைவாய்ப்புக்களை வழங்கும் முயற்சியில் ஈடுபட்டோம். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அது மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர்களுக்கான மாற்று வழிகளை ஏற்பாடு செய்யாது, இவ்வாறு முச்சக்கரவண்டி ஓட்டுனர்களுக்கான வயதெல்லையாக 35 வயதாக உயர்த்துவது அசாதாரணமான செயற்பாடாகும்.

இந்த செயற்பாடு நாட்டின் இளைஞர்களை வீணாக்கும் ஒரு செயற்பாடு என அரசாங்கத்திடம் தெரிவிக்க விரும்புகின்றதோடு, நாட்டு இளைஞர்களையும் இதற்கு எதிரான ஒன்றிணையுமாறு வேண்டிக்கொள்வதோடு, இளைஞர்கள் வாழக்கூடிய ஒரு வழிமுறையினை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்தவேண்டும் என அரசாங்கதிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

## திலீபனின் தூபியைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்தோரை அச்சுறுத்தியமைக்கு யாழ்.மாநகர சபையில் கண்டனம்



தியாக தீபம் திலீபனின் நினைவு தூபியினை சுற்றி பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த யாழ்.மாநகர சபை ஊழியர்களை இராணுவ புலனாய்வாளர்கள் அச்சுறுத்தியமை கண்டித்து யாழ். மாநகர சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் இன்று காலை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நடைபெற்றது. அதன் போது , யாழ்.மாநகர சபை ஊழியர்களை அச்சுறுத்தியமைக்கு மாநகர சபை உறுப்பினர்கள் தமது கடும் கண்டனங்களை தெரிவித்தனர்.

கடந்த 14 ஆம் திகதி மாநகர சபை பணியாளர்கள் வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என அறிமுகப்படுத்திக்கொண்டு, பணியாளர்களை வெளியில் சந்தோஷமா வாழ ஆசையில்லையா?, பருப்பும் சோறும் சாப்பிட ஆசையா? என பணியாளர்களை கேட்டு அச்சுறுத்தியிருந்தனர்.

அதனால் அச்சமடைந்த பணியாளர்கள், வேலி அடைக்கும் வேலையை கைவிட்டு அலுவலகம் திரும்பியவுடன், தாம் அந்தப் பணியில் ஈடுபடமாட்டோம் என தெரிவித்தனர். அதனால் , வேலி அடைக்கும் மிகுதிப் பணிகளை வெளியில் இருந்து தற்காலிக வேலைக்கு பணியாளர்களை அமர்த்தி யாழ்.மாநகரசபை பூரணப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை அன்றைய தினம் ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்தை கேள்வியுற்று அவ்விடத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன் சம்பவ இடத்திற்கு சென்று, நிலைமைகள் ஆராய்ந்து இருந்தார்.

குறித்த சம்பவத்தை கேள்வியுற்றவுடன் ஏன் தமக்கு அறிவிக்கவில்லை எனவும் , அறிவித்திருந்தால் தாமும் சம்பவ இடத்திற்கு வந்து ஒத்துழைப்பினை வழங்கி இருப்போம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் கடிந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்லை நிர்ணய அறிக்கைக்கு ஆதரவாகவா? எதிராகவா? ஐ.தே. க பாராளுமன்ற குழு கூட்டத்தில் தீர்மானம்

மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைமையின் எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதுடன் அன்றைய தினம் மாலை வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. இந்த வாக்கெடுப்பில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கட்டாயம் அவசியமாகும். இதன்படி பாராளுமன்றத்தின் அதிக ஆசனங்களை கொண்ட கட்சி என்ற வகையில் எல்லை நிர்ணய அறிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதா? அல்லது எதிராக வாக்களிப்பதா? என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி வியாழக்கிழமை இறுதி தீர்மானம் எடுக்கவுள்ளது.

எனினும் கட்சியிலுள்ள சிறுப்பான்மை பிரதிநிதிகள் வாக்களிப்பில் இருந்து விலக கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளி கட்சிகளின் பிரதிநிதிகள் எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களிக்க கூடும் என்றும் தெரியவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டம் வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் உள்ள குழு அறையில் கூடவுள்ளது. மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைமையின் எல்லை நிர்ணயத்தில் குளறுபடிகள் நடந்துள்ளதாகவும் சிறுப்பான்மை இன மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி புதிய தேர்தல் முறைமைக்கு சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

அதேபோன்று அரசாங்கத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் தாமதாகும் எனில் பழைய முறைமையின் கீழ் உடன் தேர்தல் நடத்த வேண்டும் என தீர்மானித்திருந்தது. பழைய முறைமையின் பிரகாரமாவது உடன் தேர்தலை நடத்த வேண்டும் கூட்டு எதிரணியும் வலியுறுத்தி வருகின்றன.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் பழைய முறைமைக்கு மீண்டும் செல்வது உகந்தது அல்ல. ஆகவே புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. தேர்தல் முறைமை தொடர்பாக பல தடவை கட்சி தலைவர்கள் கூட்டம் இடம்பெற்ற போதும் இணக்கபாடு எட்டப்படவில்லை. இதனால் இறுதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் புதிய தேர்தல் முறைமையின் எல்லை நிர்ணய அறிக்கையை வெள்ளிக்கிழமை விவாதத்திற்கு எடுத்து வாக்கெடுப்பும் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். அதாவது சபைக்கு வருகை தராத பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவையாகும். புதிய முறைமைக்கான எல்லை நிர்ணய அறிக்கைக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை என்றால் பழைய முறைமை மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்து அதனை நிறைவேற்றுவதற்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமாகும்.

இந் நிலையில் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களுக்கு உரித்தான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவேற்ற அவசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சிலர் எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களிக்க கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதுடன் கட்சியின் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து விலக கூடிய வாய்ப்பும் உள்ளது.

ஆகவே புதிய தேர்தல் முறைமைக்கான எல்லை நிர்ணய அறிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதா? அல்லது எதிராக வாக்களிப்பதா? என்பது தாடெர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாளை தீர்மானம் எடுக்கவுள்ளது. தொடர்ச்சி பக்கம் 26இல் . . .

பக்கம். 25இன் தொடர்ச்சி. . . பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடவுள்ள பாராளுமன்ற குழு கூட்டத்தின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. எனினும் சிறுப்பான்மை கட்சிகள் எல்லை நிர்ணய குழு அறிக்கைக்கு எதிராக வாக்களிக்கவுள்ளமை குறிப்பிடதக்கது.

## வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



வவுனியா - ஒலுமடு கிராமத்தின் வெடுக்குநாரி மலை பகுதியில் பொதுமக்கள் வழிபாடுகளில் ஈடுபட்ட தொல்பொருள் திணைக்களம் தடைவிதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அம் மலையினை தொல்பொருள் திணைக்களத்திலிருந்து மீண்டுத்தருமாறு கோரியும் காலை 9.30 மணியளவில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒலுமடு கிராமத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் தமிழரின் பூர்விக பிரதேசமான (300 மீற்றர் உயரமுடையை) வெடுக்குநாரி மலை அமைந்துள்ளது. குறித்த மலைப்பகுதியில் ஆதி லிங்கேஸ்வரர் என்ற சிவனுடைய லிங்கம் காணப்படுவதுடன் தமிழ் மக்களுடைய நாகர்களின் புராதான பிராமிய எழுத்துக்களும் காணப்படுகின்றன . கடந்த ஐந்து தலைமுறையாக அப்பகுதி மக்கள் குறித்த ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில் கடந்தவாரமளவில் தொல்பொருள் திணைக்களத்தால் குறித்த மலைக்கு பொதுமக்கள் சென்று வழிபடுவதற்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் இத்தடையினை தற்காலிகமாக தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் நெடுங்கேணி பொலிஸார் நீக்கி வழிபாடுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு அனுமதியளித்துள்ளதுடன் ஆலயத்தினை புனரமைப்பு செய்வதற்கும் புதிய கட்டட நிர்மாணப்பணிகள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் ஆலயத்தினை முழுமையாக மீட்டுத்தருமாறு கோரி வெடுக்குநாரி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினருடன் கிராமமக்கள், பொது அமைப்புக்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான மயில்வாகனம் தியாகராஜா, ஜீ.ரீ.லிங்கநாதன், பத்மநாதன் சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், வினோதரலிங்கம், முன்னாள் வடமாகான சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், பிரதேச சபை உறுப்பினர்கள், பல கட்சிகளின் பிரதிநிதிகள், அகில இலங்கை சைவ மகா சபையினர் என பலரும் கலந்து கொண்டு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எமது நிலம் எமது மலை, இந்துக்களை அவமதிக்காதே , வழிபாட்டுச் சுதந்திரத்தில் வாலாட்டாதே, இந்துக்கள் வழிபாட்டில் இடையூறு செய்யாதே, ஆதி லிங்கேஸ்வரர் ஆக்கிரமிப்பு இந்துக்கள் அவமதிப்பு, தொல்பொருள் திணைக்களமே மலையை தோண்டி எடுக்கவா?, தெற்கின் சுதந்திரம் வடக்கில் இல்லை, வடக்கு என்றைக்குமே மாற்றான் வீட்டுப்பிள்ளை, மண்டியிடாது வடக்கின் மானம், சைவநீதிக்கு சாவுமணி, இலங்கை அரசே எங்கே நீதி போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியுள்ளார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனிம் ஒப்படைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து பஸ் மூலம் வெடுக்குநாரி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

## அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொள்ளும்



"அரசாங்கம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பழங்களுக்கான இறக்குமதி வரி நீக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டில் பழவகைகள் மற்றும் விவசாயப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதாகவும் பிரதமர் கூறுகின்றார். இறக்குமதிகளுக்கான வரியை நீக்குவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியின் அளவு வீழ்ச்சியடையும். இவ்வாறான செயற்பாடுகளால் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றார்கள்" என மொஹான் சமரநாயக்க தெரிவித்தார். தற்போது நாடு மற்றும் நாட்டிலுள்ள விவசாயிகளின் நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தினால் ராஜகிரியவில் உள்ள அவர்களது அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு சய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "எந்தவொரு நாடும் நிலை பேறான அபிவிருத்தியடைய வேண்டுமாயின் பொருளாதார அபிவிருத்தி அவசியமானதாகும். அதற்கு விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கம் விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடாமல், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். இதனால் விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பழங்கள் பயிர்ச்செய்வதனை ஊக்குவிப்பதாக பிரதமர் கூறுகின்றார். ஆனால் சிங்கப்பூர் உடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இறக்குமதிகளுக்கான வரி பூச்சியமாக்கப்பட்டுள்ளது. இறக்குமதிகளுக்கு வரி அறவிடாமல் எவ்வாறு உள்நாட்டு பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்க முடியும்?

இராணுவத்தினர் யுத்தக்குற்றத்தில் ஈடுபட்டனர் என சர்வதேசத்திடம் ஏற்றுக்கொள்ளல், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கல், தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளிலேயே இந்த நல்லாட்சி அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. மக்களின் நலன்கருதி எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாராளமயமாக்கல் மற்றும் பூகோளமயமாக்கல் கொள்கையினைக் கடைப்பிடித்து வருகின்றார். ஆனால் அதன்மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வதனை விடுத்து, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தீங்கான செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால் இன்னும் சில வருடங்களில் நாடு பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்" என்றார்.

## ஒரு வேட்பாளரை கூட தெரிவு செய்து கொள்ள முடியாத நிலையில் கூட்டு எதிர் கட்சி நெருக்கடியில்....

ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்காது தற்போது தோல்விக் கண்டுள்ள நிலையில் அந்த இலக்கை அடைவதற்கு மஹிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றார் என தெரிவித்த மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா, ஒரு வேட்பாளரை கூட தெரிவு செய்து கொள்ள முடியாத நிலையில் கூட்டு எதிர் கட்சி நெருக்கடிகளை சந்தித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், "முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வை பிரதமராக்குவதே அரசாங்கத்தி லிருந்து விலகிய 16 பேரின் எண்ணமாகக் காணப்படுகின்றது. இதேவேளை பொது எதிரணியினர் தினேஷ் குணவர்தனவை எதிர்கட்சி தலைவராக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இப்போது மஹிந்த ஜனாதிபதி தேர்தலில் களமிரங்கப் போவதாகக் புதிய கதையை கூறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு வேட்பாளரொருவரைக் கூட தெரிவு செய்ய முடியாத நிலையிலேயே கூட்டு எதிர்கட்சி காணப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முயற்சித்தார். எனினும் அம் முயற்சி பலனளிக்கவில்லை. பின்னர் சமல் ராஜபக்ஷவை களமிறக்குவதற்கு என்ன செய்யலாம் என யோசித்தார்கள். அவருக்கும் அதற்கான வாய்ப்புக்கள் அமையவில்லை. காரணம் அவருக்கு மக்கள் ஆதரவு சிறிதேனும் காணப்படவில்லை. சில வேலைத்திட்டங்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ சமல் ராஜபக்ஷவை களமிறக்கி பார்த்தார். எனினும் அது சாத்தியப்படவில்லை. பின்னர் தினேஷ் குணவர்தன பற்றி பேசினார்கள். அவருக்கு விருப்பம் உள்ளது. எனினும் மக்கள் அதனை விரும்பவில்லை.

பொது எதிரணியினருக்கு ஸ்தீரமான ஒரு வேட்பாளரைக் கூட பெயர் குறிப்பிட முடியாத நிலையே காணப்படுகின்றது. இவ் வேட்பாளர் இல்லாத பிரச்சினைக்கு தீர்வு காணும் வரையில் காலத்தை கடத்துவதற்காகவே நான் வேட்பாளர் என ஒவ்வொருவரும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இது யதார்த்தமாகும். எவ்வாறிருப்பினும் அவரவர் விருப்பத்திற்கு எதுவும் நடக்காது. அனைத்திற்கும் சட்ட வரையறை ஒன்று உள்ளதென்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்." என தெரிவித்தார்.

## வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மீதான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு


முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2 அம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்ததுடன், மாவட்ட கடற்தொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளுக்கு தமது கோரிக்கைகளை முன்வைக்கச்சென்றபோது, நீண்டநேரம் ஆகியும் திணைக்களத்திற்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது இருந்த நிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

இவ்வாறு அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டதுடன், குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆயர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், இன்றைய தினம் தவணையிடப்பட்டிருந்தது.

வடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேரும் இன்றையதினம் வழக்கு விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

# இந்தியச் செய்திகள்

## திருப்பரங்குன்றமும், திருவாரூரும் கிடைக்காது டிடிவி தினகரனுக்கு திகார் ஜெயில்தான்: அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி




டிடிவி தினகரனுக்கு திருப்பரங்குன்றமும் கிடைக்காது, திருவாரூரும் கிடைக்காது என அமைச்சர் ஜெயக்குமார் கூறினார். சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: ஜப்பான் நாட்டில் மீன்வளம் சம்பந்தப்பட்ட 3 நாள் நடக்கும் கண்காட்சியில் கலந்து கொள்ள செல்கிறேன். மீன்களை சுகாதாரமாக பிடிப்பது மற்றும் பாதுகாப்பது பற்றி அறிய உள்ளேன். ஜப்பானியர்கள் சூறை மீன்களை விரும்பி சாப்பிடுவார்கள். தமிழகத்தில் அந்த மீன்கள் அதிகமாக கிடைப்பதால், அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது பற்றியும் பேசப்படும். ஜனவரியில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடக்கிறது. அதில், ஜப்பானில் மீன்வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களை அழைப்பது சம்பந்தமாகவும் செல்கிறோம்.

உபரி நீர் திறந்து விட்டதால் தமிழகத்தில் வெள்ளச் சேத பாதிப்புகள் பற்றி முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நேரடியாக பார்வையிட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய நிதி உதவி அவர்கள் தங்குவதற்காள உணவு உடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசின் நிதி உதவியும் நிச்சயமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும். 62 தடுப்பணைகள் செயல்படாத திட்டம் என்றும் தமிழக மக்களை ஏமாற்றும் செயல் என்று ராமதாஸ் கூறியுள்ளது சரியானது அல்ல. ஓய்வு பெற்றுள்ள தலைமைப் பொறியாளர்கள் வல்லுநர்கள் இவர்களைக் கொண்டு புவியியல் முறைப்படி நீரின் ஓட்டத்தைப் பொறுத்து எந்தெந்த இடத்தில் தடுப்பணைகள் கட்டப்படுமோ அந்த இடத்தில் தடுப்பணை கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் இவரது அறிக்கையை பார்க்கும் அவரது கண்களில் கோளாறு என்றால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகத்தில் தமிழகத்தின் நிலை மிகவும் தெளிவானது ஏற்கெனவே மக்களின் மன நிலையைப் பொறுத்து ஸ்டெர்லைட் ஆலையை தமிழக அரசு இழுத்து மூடியுள்ளது. டிடிவி தினகரன், திருப்பரங்குன்றமும் எங்களுக்குதான், திருவாரூரும் எங்களுக்குதான் - என்று கூறி வருகிறார். அவர்களுக்கு திருப்பரங்குன்றமும் கிடைக்கபோவதில்லை. திருவாரூரும் கிடைக்கபோவதில்லை. அவர்களுக்கு கிடைக்கப்போவது உறுதியாக திகார் ஜெயில் தான். இதுதான் நிச்சயமாக நடக்கபோகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## பெண்களுக்கு ஆபத்து நிறைந்த நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடமா : மத்திய அரசு திட்டவட்ட மறுப்பு




லண்டனைச் சேர்ந்த தனியார் அமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கை ஒன்றில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவும் மற்றும் ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளதாக கூறியது. ஆனால் இந்த அறிக்கைக்கு இந்தியா திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து செய்தி குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், எந்த புள்ளி விபரமும் இல்லாமல் தனியார் அமைப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது. உரிய முறையில் கருத்து கணிப்பு நடத்தாமல் பிற நாட்டினருக்கு இந்தியா மீது தீய கெட்ட எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக சாடியுள்ளது. 15 முதல் 19 வயதிலான பெண்கள் தாய்மை அடைவது 2015 - 16 ம் ஆண்டிலேயே 7.9 சதவீதமாக குறைக்கப்பட்டு விட்டதாக கூறியுள்ளது. பாலியல் பலாத்கார குற்றங்கள் இந்தியாவில் 1000 பேருக்கு 0.03மூ-ஆக உள்ளது. ஆனால் அமெரிக்காவில் 1.2% பலாத்காரங்கள் நடக்கின்றன. மேலும் பெண்களுக்கான திருமண வயது அனைத்து நாடுகளிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக லண்டனைச் சேர்ந்த தாம்சன் ராய்டர்ஸ் பவுண்டேஷன் சார்பில் உலக அளவில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 548 வல்லுநர்களிடம் ஆன்லைன், தொலைபேசி, நேரடியாகவும் கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. கடந்த மார்ச் 26ம் தேதியில் இருந்து மே 4ம் தேதி வரை நடத்தப்பட்ட இந்த கருத்து கணிப்பின் முடிவை ராய்டர்ஸ் பவுண்டேஷன் சமீபத்தில் வெளியிட்டது.

இந்த ஆய்வு முடிவில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவும் மற்றும் ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளதாக கூறியுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. சிரியாவை விடவும் பெண்களுக்கு மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நாடு இந்தியா என ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த ஆய்வறிக்கையை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சென்னை தினம் கலைஞரை நினைவூட்டும் மேலும் ஓர் அடையாளம்: செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை

சென்னை தினம் - திமுக தலைவர் கலைஞரை நினைவூட்டும் மேலும் ஓர் அடையாளம் என்று திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: ஆண்டுதோறும் ஆகஸ்ட் 22ம் தேதியை சென்னை தினமாக கடைப்பிடிக்கிறார்கள். பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பெனி, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை இடம் தொடர்பாக 1639 ஆகஸ்ட் 22ல் ஒப்பந்தம் செய்து கொண்டதன் நினைவாக இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1920ம் ஆண்டில் நீதிக்கட்சி ஆட்சியிலேயே சென்னையின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டு, கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன.

சென்னை மாகாணம் (மெட்ராஸ் ஸ்டேட்) என்பதை தமிழ்நாடு என்று மாற்றிப் பெயர் சூட்டிப் பெருமை சேர்த்தவர், தலைநகர் சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, மெரினா கடற்கரையில் தமிழ்ச் சான்றோர்களுக்கு சிலை அமைத்து தமிழ் தமிழர்களின் பெருமையை சென்னை வாயிலாக உலகம் முழுவதும் அறியச் செய்தார் அண்ணா ஆவார்.

தொடர்ந்து முதல்வர் பொறுப்பை ஏற்ற திமுக தலைவர் கலைஞர் சென்னை என தமிழிலும், மெட்ராஸ் என ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, சென்னை என அனைத்து மொழிகளும் ஏற்றுப் பயன்படுத்திடும் வகையில், பெயர் மாற்றம் செய்து வரலாறு படைத்தார்.

திராவிட இயக்க வரலாற்றில் சென்னை மாநகரம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. திராவிடர் சங்கம், நீதிக்கட்சி ஆகியவை தொடங்கப்பட்ட மாநகரம் இது. அண்ணா முதன்முதலில சிறை கண்டதும் சென்னையில்தான். அவர் வழியில் வந்த தலைவர் கலைஞர், அண்ணா நகர், அண்ணா சதுக்கம், வள்ளுவர் கோட்டம், அண்ணா நூற்றாண்டு நூலகம், அண்ணா மேம்பாலம், டைடல் பூங்கா, செம்மொழிப் பூங்கா, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என காலத்திற்கேற்ற நவீனமான வளர்ச்சியுடன் கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க அடையாளங்கள் உருவாக்கப்பட்டன. வரலாற்றின் அந்தப் பொன்னேடுகளை நினைவுகூர்ந்து, சென்னை தினத்தைக் கடைப்பிடிப்போம். மெட்ராஸ் டே என்று சொன்னாலும், அது சென்னை தினம் தான். அதன் பின்னணியில் மிளிரும் திமுக தலைவர் கலைஞரின் நினைவுகளை என்றும் போற்றி மகிழ்வோம்.

தடைக்கு வரவேற்பு: திமுக செயல் தலைவர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள டிவிட்டர் பதவில் கூறியிருப்பதாவது: சேலம்-சென்னை 8 வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்திருப்பதை வரவேற்கிறேன். அப்பாவி மக்கள் மற்றும் விவசாயிகளின் நிலத்தை அராஜக போக்கில் கைப்பற்றிய அதிமுக அரசுக்கு நீதிமன்றம் தக்க பாடம் புகட்டியிருக்கிறது. இனியாவது, மாற்றுவழி குறித்து சிந்திக்க வேண்டும்.

## அதிமுக விதிமுறைகளில் திருத்தம் தொடர்பான வழக்கு இபிஎஸ், ஓபிஎஸ் கோரிக்கை நிராகரிப்பு



டெல்லி உயர் நீதிமன்றத்தில் இபிஎஸ், ஓபிஎஸ் தரப்பில் மேல்முறையீடு மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை அதிமுக ஆதரிக்கும் என்று சொன்னதை அடுத்து, செய்தி தொடர்பாளராக இருந்த கே.சி. பழனிசாமி நீக்கப்பட்டார்.

இதில் அதிருப்தியடைந்த கே.சி.பழனிசாமி டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், அதிமுக சட்டவிதிகளில் மாற்றம் செய்து ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகிய புதிய பதவிகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் உருவாக்கியுள்ளனர்.

இது கட்சி சட்டவிதிகளின்படி செல்லத்தக்கது இல்லை என்று கூறியிருந்தார். இதையடுத்து மனுவை விசாரித்த ஒரு நீதிபதி அமர்வு கே.சி.பழனிசாமியின் மனுவை தலைமை தேர்தல் ஆணையம் அடுத்த 4 வாரத்தில் விசாரித்து முடித்து வைக்க வேண்டும் என கடந்த வாரம் உத்தரவிட்டது. இந்நிலையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதல்வர் ஓபிஎஸ் தரப்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் நேற்று மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், அதிமுகவில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து பதவிகளும் அக்கட்சியின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு உறுப்பினர்களின் முழு ஆதரவோடு தான் எடுக்கப்பட்டது. மேலும் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட கே.சி.பழனிசாமி அதிமுகவின் பொறுப்பு, விதிகள் ஆகியவை குறித்து கேள்வியெழுப்ப அதிகாரம் கிடையாது.

அதனால் இந்த விவகாரத்தில் கே.சி.பழனிசாமியின் கோரிக்கையை ஏற்று ஒரு நீதிபதியின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. டெல்லி உயர்நீதிமன்றத்தின் ஹிமா கோஹ்லி மற்றும் ரேகா பாலி ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் தங்கள் உத்தரவில், இந்த விவகாரத்தில் தனி நீதிபதி வழங்கிய உத்தரவிற்கு எந்தவித தடையும் விதிக்க முடியாது.

அதன் இறுதி முடிவு குறித்த எந்த உத்தரவையும் செப்டம்பர் 13ம் தேதிவரை வெளியிட வேண்டாம். மேல்முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கே.சி. பழனிசாமி நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டும் என தெரிவித்த நீதிபதிகள் வழக்கை செப்டம்பர் 13ம் தேதிக்கு ஒத்திவைத்து நேற்று உத்தரவிட்டனர்.

தொடர்ச்சி. பக்கம் 28இல் . . .

# இந்தியச் செய்திகள்

## மாவட்டத்தில் உள்ள கரும்பு ஆலைகளில் ரசாயன கலப்படம் இல்லாத நாட்டு சர்க்கரை தயாரிப்பு



தர்மபுரி மாவட்டத்தில், பாப்பாரப்பட்டி, கடகத்தூர், முத்துக்கவுண்டன் கொட்டாய், முக்கல்நாயக்கன்பட்டி, புலிகரை, பாலக்கோடு உள்ளிட்ட இடங்களில் 50க்கும் மேற்பட்ட கரும்பு ஆலைகள் செயல்படுகின்றன. கடகத்தூர் செல்லும் சாலையில் முத்துகவுண்டன் கொட்டாய் கிராமத்தில் உள்ள ரசாயனம் கலக்காத நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இவை பாக்கெட்டுகளில் அடைத்து கடைகளுக்கு மொத்த விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

ஆலை உரிமையாளர்கள் கூறுகையில், கரும்பில் இருந்து நாட்டு சர்க்கரை, மண்டை வெல்லம், அச்சு வெல்லம் போன்றவை தயாரிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் கடகத்தூர் பகுதியில் 20க்கும் மேற்பட்ட கரும்பு ஆலைகள் உள்ளன. இதில் நாங்கள் கரும்பில் இருந்து நாட்டு சர்க்கரை தயாரிக்கிறோம். தற்போது மக்கள் ரசாயனம் கலக்காத இயற்கையான சர்க்கரையை விரும்புகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் பல டீக்கடைகளில் இந்த சர்க்கரையை தான் பயன்படுத்துகின்றனர்.

மக்கள் விருப்பத்திற்கேற்ப நாட்டு சர்க்கரையை தயாரிக்கிறோம். தற்போது மாவட்டத்தில் கரும்பு விளைச்சல் போதிய அளவிற்கு இல்லாததால் கர்நாடக மாநிலம் மைசூரு, மாண்டியாவில் இருந்து கரும்புகளை வாங்கி வருகிறோம். கர்நாடகாவில் இருந்து தர்மபுரிக்கு கரும்பு கொண்டு வந்து சேர்க்க ஆள் கூலியுடன் ஒரு டன்னுக்கு 3,600 வரை செலவாகிறது. இந்த ஆலையில் 10 பேர் வரை பணியாற்றுகின்றனர். தினமும் 5 டன் கரும்பில் இருந்து பால் பிழிந்து அதை பெரிய சட்டியில் ஊற்றி காய்ச்சுகிறோம். கரும்பு பாகு பதத்திற்கு வந்ததும் அதனுடன் எலுமிச்சை மற்றும் சுண்ணாம்பு கலக்கிறோம்.

இதனால் கரும்பு பாகு உதிரியாக பிரிந்து விடுகிறது. வேறு ரசாயண பொருட்கள் கலக்க உணவு பாதுகாப்பு அதிகாரிகளும் கடுமையாக எச்சரிப்பதாலும், மக்களும் இயற்கையை விரும்புவதால் ரசாயன கலப்பின்றி இயற்கையான நாட்டு சர்க்கரை தயாரிக்கிறோம். தினமும் 5 டன் கரும்பில் இருந்து 500 கிலோ சர்க்கரை தயாரிக்கிறோம். நாட்டு சர்க்கரையை மொத்த வியாபாரிகள் இங்கேயே வந்து வாங்கி செல்கின்றனர். இது தவிர நாங்கள் பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கிறோம். இது தவிர உள்ளூர் வியாபாரத்திற்காக அரை கிலோ ஒரு கிலோவாக பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்பப்படுகிறது, என்றனர்.

## கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு நாங்கள் காரணமில்லை : உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனு



கேரளாவில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு நாங்கள் காரணமில்லை என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது. இடுக்கி பகுதி வெள்ளத்திற்கு கேரள அரசு தான் காரணம் என்றும் தமிழக அரசு காரணமல்ல என்றும் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடுக்கிக்கு முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 2 டிஎம்சி தண்ணீர் தான் திறக்கப்பட்டது என்றும் தமிழக அரசு கூறியுள்ளது ஆக.14 முதல் 19 வரை இடுக்கி, இடமலையாறு அணைகளில் இருந்து 36.28 டிஎம்சி தண்ணீர் திறக்கப்பட்டதே கேரளாவில் வெள்ளம் ஏற்பட காரணம் என்று தெரிவித்த தமிழக அரசு, ஆக.15ல் முல்லைப் பெரியாறு அணை 140 அடியை எட்டியபோது, அணையிலிருந்து இடுக்கி அணைக்கு 1.24 டிஎம்சி தண்ணீர் திறக்கப்பட்டது ஆனால் அன்று கேரளா அரசு இடுக்கி அணையில் இருந்து 13.79 டிஎம்சி தண்ணீரை திறந்துவிட்டது என்று கூறியது.

## தமிழக பொறுப்பு செயலாளர் சஞ்சய்தத் காங்கிரசுக்கு புதிதாக 9 செயலாளர்கள் நியமனம்



காங்கிரஸ் கட்சிக்கு புதிதாக 9 செயலாளர்களை நியமனம் செய்து கட்சி தலைவர் ராகுல்காந்தி உத்தரவிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சி தலைவராக ராகுல்காந்தி கடந்த ஆண்டு பொறுப்பேற்றார். அப்போது முதல் கட்சிக்கு புது ரத்தம் பாய்ச்சும் வகையில் கட்சியில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார். இதன் ஒருபகுதியாக பல்வேறு மாநிலங்களுக்கு புதிதாக 9 செயலாளர்களை நியமனம் செய்து அவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் அசோக் கெலாட் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கான செயலாளராக ஷகீல் அகமதுவும், உத்தரகாண்டுக்கு ராஜேஷ் தமானியும், மேற்குவங்கத்திற்கு பி.பி.சிங், முகமது ஷாவீத், சரத் ரவுத் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு குஜராத் சட்டப்பேரவை தேர்தலின்போது காங்கிரசில் இணைந்த பிற்படுத்தப்பட்ட இனத்தலைவர் அல்பேஸ் தாகூர் பீகாருக்கான செயலாளராகவும், மகாராஷ்டிராவுக்கான கட்சியின் செயலாளர்களாக சல்லா வம்சி சந்த் ரெட்டி மற்றும் சந்தீப் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மகளிர் காங்கிரசின் பொதுச்செயலாளராக ரேபரலி சதார் தொகுதி எம்எல்ஏ அதிதி சிங் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாட்டுக்கான கட்சியின் பொறுப்பு செயலாளராக முன்னாள் எம்எல்சி சஞ்சய் தத் நியமிக்கப்பட்டுள்ளார். இது தவிர இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த தீபக் ரதோத், உத்தரகாண்டை சேர்ந்த ராஜ்பால் பிஷ்த் ஆகியோர் கட்சியின் ஆய்வு கமிட்டி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திரிணாமுல் அலுவலகத்தில் குண்டுவெடித்து ஒருவர் பலி



மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் அலுவலகத்தில் குண்டு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 2 பேர் காயம் அடைந்துள்ளனர். மேற்கு வங்க மாநிலம், மிட்னாப்பூர் மாவட்டத்தை சேர்ந்த மக்ராம்பூர் பகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி அலுவலகம் உள்ளது. இங்கு காலை 10 மணியளவில் திடீரென குண்டு வெடித்தது.

இதில் தூக்கி வீசப்பட்டு ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார். பொலீசார் அங்கு விசாரணை நடத்தினர். கேஸ் சிலிண்டர் வெடித்ததா அல்லது நாட்டு வெடிகுண்டு வெடித்ததா என பொலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிரபல பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் மரணம்: பிரதமர் மோடி, தலைவர்கள் இரங்கல்



மூத்த பத்திரிகையாளரும், பிரபல எழுத்தாளருமான குல்தீப் நய்யார் டில்லியில் நேற்று முன்தினம் நள்ளிரவு காலமானார். அவருக்கு வயது 95. பாகிஸ்தானின் பஞ்சாப் அருகே உள்ள சியால்கோட்டில் கடந்த 1923ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் தேதி பிறந்தவர் குல்தீப் நய்யார். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது இந்தியாவிற்கு குடிபெயர்ந்தார். உருது மொழி பத்திரிக்கையாளராக தனது பணியை தொடங்கிய குல்தீப் நய்யார் பின்னர் எழுத்தாளராகவும், அரசியல் விமர்சகராகவும் பிரபலம் ஆனார். இந்தியன் எக்ஸ்பிரஸ் உட்பட பல்வேறு பத்திரிக்கைகளில் ஆசிரியராக பணியாற்றி உள்ளார்.

இந்தியாவின் மிக மூத்த பத்திரிக்கையாளரான குல்தீப், மகாத்மா காந்தி, முகமது அலிஜின்னா, மவுண்ட் பேட்டன், மன்மோகன் சிங் என குல்தீப் நய்யார் கேள்விகளுக்கு பதில் கூறாத தலைவர்களே இல்லை எனலாம். ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரியின் மர்ம மரணம், இந்திரா காந்தியின் எமர்ஜென்சி ரகசியங்கள் என பல்வேறு சம்பவங்களை களத்தில் நின்ற எழுதியவர். இந்தியாவின் அனைத்து பிரதமர்கள் மற்றும் தமிழகத்தில் காமராஜருடன் நெருங்கி பழகியவர். கடந்த 70 ஆண்டுகளாக 14 மொழிகளில் 80 பத்திரிக்கைகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். கடந்த 1997ம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டெல்லியில் உள்ள எஸ்கார்ட்ஸ் மருத்துவமனையில் கடந்த 5 நாட்களுக்கு முன் அனுமதிக்கப்பட்டார். அங்கு முன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு குல்தீப் மரணமடைந்தார். குல்தீப் மறைவுக்கு பிரதமர் நரேந்திரமோடி, அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். டெல்லியின் லோதி பகுதியில் உள்ள இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெற்றது.

## அண்ணாமலையார் கோவிலில் தீபத் திருவிழாவை முன்னிட்டு பந்தகால் நடும் விழா



திருக்கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு அண்ணாமலையார் கோவிலில் பந்தகால் நடும் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. கார்த்திகை தீபத் திருவிழா நவம்பர் மாதம் 14ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான பூர்வாங்கப் பணிகள் செய்வதற்காக ராஜகோபுரம் முன்புறம் உள்ள 16 கால் மண்டபத்தில் பந்தக்கால் நடப்பட்டது. பக்தர்கள் திரளாக வந்து இந்த பூஜையில் கலந்து கொண்டனர்.

இந்த விழாவை முன்னிட்டு அதிகாலையிலேயே கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. இதனை தொடர்ந்து பந்தகால் நடும் நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் கந்தசாமி மற்றும் இணை ஆணையர் ஞான சேகர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு பூஜையை சிறப்பித்தனர்.

# உடலினை உறுதி செய்!



ஃபிட்னஸ் என்பது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மட்டுமின்றி, வெற்றிகரமான வாழ்க்கைக்கும் மிகவும் அவசியமான ஒன்று. தினசரி உடற்பயிற்சி செய்வதன் மூலம் கட்டுக்கோப்பான உடல் அமைப்பைப் பெறுவதோடு சோம்பேறித்தனம், சோர்வு போன்றவற்றை முறித்து புத்துணர்வும் பெறலாம். மேலும் இதன் மூலம் உடலும் மனமும் வலுப்பெற்று நமது வாழ்நாள் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடற்பயிற்சியில் மிகுந்த ஆர்வமும், அதனைத் தொடர்ந்து மற்றவர்களுக்கு வலியுறுத்திக் கொண்டும் இருக்கும் பொதுநல மருத்துவர் சுரேஷ்குமாரிடம் இதுபற்றிப் பேசினோம்....ஃபிட்னஸின் அவசியம், ஜிம்முக்குப் போகிறவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும், தன்னுடைய தினசரி பயிற்சிகள் பற்றியும் நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார்.

உடற்பயிற்சிகள் ஏன் செய்ய வேண்டும்?

விவசாயிகள், மீனவர்கள் போன்ற பிற உடல் உழைப்புமிக்க பணி செய்கிறவர்களுக்கு அவர்கள் செய்கிற வேலைகளின் மூலமே உடல் வலுவடைகிறது. ஆனால், இன்றைய வாழ்க்கை முற்றிலும் ஞநனநவெயசல டகைந ளவலடந என்கிற வாழ்க்கை முறையாக இருக்கிறது. அதனால் உடல் உழைப்பின்றி ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்தவாறு, கணினி போன்ற பிற பணிகள் செய்கிறவர்களுக்கு ஃபிட்னஸ் பயிற்சிகள் அவசியம் தேவைப்படுகிறது. இதனை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

Be Act, Start a nice time இது போன்ற வார்த்தைகளை அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து கொண்ட நபர்களிடம் மருத்துவர்கள் சொல்வதுண்டு. அதாவது அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடல் வலிமை பெறுவதற்குரிய பயிற்சிகளை மருத்துவரின் ஆலோச்னைப்படி மேற்கொள்வது அவசியம். மனிதர்கள் பொதுவாகவே ஒரு வேலையை செய்வது, நடப்பது என்று ஏதாவது ஒரு நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது அவசியம். ஆனால், எந்த இயக்கமும் இன்றி ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்து கொண்டே இருப்பதுதான் நோய்கள் ஏற்பட காரணமாகிறது. எனவே, நோய்களின்றி நலமுடன் வாழ உடற்பயிற்சிகள் அவசியம். Sitting is the new smoking என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிற அளவுக்கு அதிகப்படியான நேரங்கள் அமர்ந்த நிலையிலேயே இருக்கிறோம். இந்த அபாயத்திலிருந்தும் தற்காத்துக் கொள்ள வேண்டியது கட்டாயம் என்றே சொல்லலாம்.

உடற்பயிற்சிகளின் பயன்கள் என்ன?

உடலிலுள்ள கெட்ட கொழுப்புகளை கரைத்து நல்ல கொழுப்புகளை சீரமைக்கவும், ரத்தத்திலுள்ள கொழுப்பு சத்துக்களை சரி செய்யவும், தசைகள் வலுப்பெறவும் உடற்பயிற்சிகள் உதவுகிறது. மேலும் அது உடலில் தங்கி கொழுப்பாக மாறும் தேவையற்ற கலோரிகளை எரித்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும், உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும், ஞாபக சக்தி அதிகரிக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. எனவே, தினசரி குறைந்தது 30 நிமிடங்கள் முதல் ஒன்றரை மணி நேரம் வரை தகுந்த உடற்பயிற்சி நிபுணரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சிகள் செய்வது நல்லது.

உடற்பயிற்சியில் உங்களது அனுபவங்கள்...

பொதுமக்களுக்கு அறிவுரையும், ஆலோசனையும் சொல்கிற மருத்துவர்கள் அதற்குத் தகுதி உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். இல்லாவிட்டால் டாக்டருக்கே உடம்பு சரியில்லையா டாக்டரே ஃபிட்டா இல்ல. நாம ஏன் அலட்டிக்கணும் என்று சாதாரணமாகக் கிண்டலடித்துவிட்டு நம்மை காலி செய்துவிடுவார்கள். அதனால், மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று விரும்புவேன். உணவில் கவனம் செலுத்துவதைப் போலவே உடற்பயிற்சியிலும் அதிகம் கவனம் செலுத்துகிறேன்.

நான் 16 வருடங்களாக உடற்பயிற்சிகளை செய்து வருகிறேன். அதோடு Martial art என்று சொல்கிற தற்காப்புக்கலைப் பயிற்சிகளையும் செய்து வருகிறேன். தற்காப்புக்கலைப் பயிற்சிகள் உடல் உள்ளுறுப்புகளின் சீரான இயக்கத்திற்கு உதவுவதோடு, உடல் வலிமையையும் அதிகப்படுத்துகிறது. நான் தற்காப்புப் பயிற்சிகளை வாரத்தில் மூன்று நாட்களும், ஜிம்முக்கு சென்று செய்கிற பயிற்சிகளை வாரத்திற்கு 6 நாட்களும் செய்து வருகிறேன். இப்பயிற்சிகளால் உடலில் வேகமும், நெகிழ்வுத்தன்மையும் அதிகமாகிறது. தற்காப்புப் பயிற்சிகள் செய்பவர்களும்கூட உடல் தசைகள் மற்றும் எலும்புகளின் வலுவை அதிகரிப்பதற்காக ஜிம் சார்ந்த பயிற்சிகளையும் செய்வதுண்டு. இதுபோன்ற பயிற்சிகள் செய்பவர்கள் சரியான உணவுமுறைகளைப் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியம். நான் அரிசி வகை உணவுகள் அதிகமாக சாப்பிடுவதில்லை. புரதச்சத்துள்ள மீன் உணவுகள், பழங்கள், பழச்சாறுகள் போன்றவற்றை நான் செய்கிற பயிற்சிகளுக்கு ஏற்றவாறு எடுத்துக்கொள்கிறேன். ஜிம்முக்கு செல்பவர்களுக்கு உங்களுடைய ஆலோசனைகள் என்ன?

நான் பாடி பில்டராக வேண்டும், எடையைக் குறைக்க வேண்டும், உடலை ஃபிட்டாக வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது உடல் பருமன் போன்ற பிற உடல்நல பிரச்னைகளை சரி செய்ய வேண்டும் என்பது போன்ற ஏதாவது ஒரு நோக்கத்தோடு ஜிம்முக்கு போக வேண்டும். அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால் அதற்குரிய சரியான முறைகளைப் பின்பற்றி உரிய நபர்களின் ஆலோசனைப்படி நடந்துகொள்வது அவசியம். உடற்பயிற்சிகளை செய்வதற்கு போதுமான நேரத்தை முதலில் ஒதுக்கிவிட வேண்டும். அந்த நேரத்தில் வேறெந்த பணிகளும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

புதிதாக ஜிம்முக்கு செல்லும் நபர்கள் தாமாகவே ஆர்வக் கோளாறில் அதிக எடை தூக்குவது, அதிக எண்ணிக்கைகள் செய்வது என்று தாமாகவே உடற்பயிற்சிகள் செய்வது தவறு. இதனால் உடலில் அடிபட்டு காயங்கள் ஏற்படவோ, உடல்நலனில் பாதிப்புகள் ஏற்படவோ வாய்ப்புள்ளது. எனவே, தகுந்த உடற்பயிற்சி நிபுணர்களின் ஆலோசனைப்படி அவரவர் உடல் திறன் மற்றும் உடல் நிலைகளுக்கேற்ப படிப்படியாக எடைகளையும், எண்ணிக்கைகளையும் அதிகப்படுத்துவதே சரியாக இருக்கும். ஃபிட்னஸ் விஷயத்தில் இளைஞர்கள் செய்கிற தவறுகள் என்ன?

ஜிம்முக்குச் சென்ற ஒரு மாதத்திலேயே உடல் தசைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்படாது. இன்று இளைஞர்கள் பெரும்பாலும் விரும்பும் சிக்ஸ்பேக் உடலமைப்பு உடனடியாக வந்துவிடாது. அதற்குரிய உடற்பயிற்சிகளை குறிப்பிட்ட கால அளவில் தொடர்ந்து செய்து வந்தால்தான் அந்த உடலமைப்பைப் பெற முடியும். புதிதாக ஜிம்முக்கு செல்பவர்கள் குறைந்தது 1 வருடம் தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வந்தால் உடலில் ஓரளவு மாற்றங்கள் தெரியும். ஒன்றரை அல்லது இரண்டு வருடங்களுக்குப் பிறகு 20 சதவிகித வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். அதன்பிறகு தொடர்ந்து பயிற்சி செய்கிறபோது மெதுவாகவும், படிப்படியாகவும்தான் தசைகளில் மாற்றங்கள் ஏற்படும்.

கடுமையான அளவில் உடற்பயிற்சி செய்கிற நபர்கள் ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனைப்படி சரியான உணவு முறைகளைப் பின்பற்றுவதோடு போதுமான நீர் அருந்த வேண்டியது மிகவும் அவசியம். திடீரென்று ஜிம்முக்கு சென்று உடற்பயிற்சிகள் செய்கிறபோது உடலின் தசைகளில் வலி உண்டாகும். அதற்காக உடற்பயிற்சிகளை செய்யாமல் இருப்பது சரியல்ல. அந்த வலியைத் தாங்கிக்கொண்டு தொடர்ந்து அப்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

அதன்பிறகு வலி சரியாகி உடல் தசைகள் படிப்படியாக வலுவடையத் தொடங்கும். வலியைத் தாங்கப் பழகிக் கொண்டால் உடல் வலிமையாகும் என்பதை ஜிம்முக்குப் புதிதாக போகிறவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வேறு ஏதேனும் முக்கிய ஆலோசனைகள்? ஃபிட்னஸ் பயிற்சிகள் தேவைப்படும் நபர்கள் அதற்குரிய உடற்பயிற்சி நிபுணர், ஊட்டச்சத்து நபுணர் மற்றும் மருத்துவரின் ஆலோசனைகளின்படி பயிற்சிகள் மேற்கொள்வது சிறப்பானதாக இருக்கும். தன்னிச்சையாக கற்றுக் கொள்ள நினைப்பதையோ, உடற்பயிற்சி சாதனங்கள் வாங்கும் வாய்ப்புகள் இருப்பதால் அதனை அறியாமையோடு பயன்படுத்தக் கூடாது. ரத்தம் மற்றும் உடல் ஹார்மோன் சுரப்புகளின் நிலையை மருத்துவர் ஆலோசனைப்படி பரிசோதித்த பிறகு அவரவர் உடல்நிலைக்கேற்ற உடற்பயிற்சிகள், உணவு முறைகளைப் பின்பற்றுவது மிகவும் நல்லது. தொடக்கநிலை பயிற்சியாக ஓட்டப் பயிற்சிகள் செய்வதைவிட, வேகமான நடைப்பயிற்சி மிகவும் நல்லது.

# வயிற்றுபோக்கை குணப்படுத்தும் மருத்துவம்



நமக்கு எளிதில், அருகில் கிடைக்க கூடிய மூலிகைகள், இல்லத்தில் அஞ்சறைப்பெட்டியில் உள்ள பொருட்கள் ஆகியவற்றை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள மருத்துவம் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்த்து வருகிறோம். அந்தவகையில், வயிற்றுப்போக்கு பிரச்னையை தீர்க்கும் மருத்துவ முறைகள் குறித்து பார்க்கலாம். கொய்யா இலை, நாவல் இலை, வெண்டைக்காய், அத்திக்காய் ஆகியவை வயிற்றுப்போக்குக்கு மருந்தாகிறது. தொற்று கிருமிகள், அஜீரணம் போன்றவை வயிற்றுப்போக்கு பிரச்னைக்கு காரணமாகிறது. மேலும், முறையற்ற உணவு முறைகளாலும் வயிற்றுபோக்கு உண்டாகிறது. அதிமாக வயிற்றுபோக்கு ஏற்படும்போது நீர்ச்சத்து குறைந்து மயக்கம், வாந்தி, காய்ச்சல், குமட்டல் போன்றவை ஏற்படும்.

அதிக காரமுள்ள உணவுப்பொருட்களை சாப்பிடுவதால் ஏற்படும் அல்சர் மற்றும் மன உளைச்சல் காரணமாக வயிற்றுபோக்கு ஏற்படும். நாவல் மரத்தின் இலை, கொய்யா இலை கொழுந்து ஆகியவற்றை பயன்படுத்தி வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் நாவல் இலை, கொய்யா இலைகளின் கொழுந்துகளை எடுத்து துண்டுகளாக்கி போடவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி இருவேளை குடித்துவர எவ்வித வயிற்றுபோக்கும் கட்டுக்குள் வரும். குடல் பலப்படும்.

வெண்டைக்காய் பிஞ்சுகளை பயன்படுத்தி வயிற்றுப்போக்கு பிரச்னைக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெண்டைக்காய், பனங்கற்கண்டு. செய்முறை: ஒரு பாத்திரத்தில் வெண்டைக்காய் பிஞ்சுகளை சிறு துண்டுகளாக்கி போடவும். இதனுடன் அரை ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி தினமும் இருவேளை குடித்துவர வயிற்றுக் கடுப்பு, சீதபேதி, ரத்தம் கலந்துவரும் பேதி ஆகியவை குணமாகும். வயிற்றுபோக்கு சமயத்தில் ஏற்படும் அடிவயிற்று வலி சரியாகும்.பல்வேறு நன்மைகளை கொண்ட வெண்டைக்காய் சுவையான உணவாகிறது. வழுவழுப்பு தன்மை உடைய இது உடல், குடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது. வயிற்றுப்போக்கு என்பது கோடை, குளிர், மழை என அனைத்து காலங்களிலும் வரக்கூடியது.

சாதிக்காயை பயன்படுத்தி வயிற்றுப்போக்குக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: சாதிக்காய், பால். செய்முறை: 50 மில்லி காய்ச்சிய பால் எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் சாதிக்காய் சேர்த்து கலந்து குடிக்கும்போது வயிற்றுப்போக்கு குணமாகும். பல்வேறு மருத்துவ குணங்களை உடைய சாதிக்காய் மிகுந்த துவர்ப்பு சுவை உடையது. இது வயிற்றுபோக்கை குணப்படுத்தும் தன்மை கொண்டது. வயிற்று கோளாறுகள் சரியாகும். நுண்கிருமிகளை போக்க கூடியது. அத்திக்காயை பயன்படுத்தி வயிற்றுபோக்குக்கான மருந்து தயாரிக்கலாம். அத்தி பிஞ்சுகளை நசுக்கி ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் 2 ஸ்பூன் தயிர், சிறிது உப்பு சேர்த்து கலந்து சாப்பிட்டுவர வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி குணமாகும். அத்தி துவர்ப்பு சுவை உடையது. துவர்ப்பு சுவை ரத்தத்தை கட்டக்கூடியது. கழிச்சலை நிறுத்தும் தன்மை உடையது. அத்திக்காயை வற்றலாக சாப்பிட்டுவர வயிற்றுபுண் சரியாகும்.

# வர்த்தகச் செய்திகள்

## முல்லைத்தீவில் உள்ளூர் பொருளாதரத்தை ஊக்குவிக்கும் ஓர் முயற்சி



முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரம் பகுதியில் முல்லை பால் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளது. முல்லைத்தீவில் உள்ள கிராமங்களிலிருந்து பால் கொள்முதல் செய்து குளிரூட்டுதல், பதப்படுத்துதல் மற்றும் தரம் வாரியாக வகைப்படுத்தி நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகிறது.

அதில் எஞ்சிய கொழுப்பு, நெய், வெண்ணை அல்லது பால் கட்டிகளாக கடைகளுக்கு விற்கப்படுகிறது. குறித்த தொழிற்சாலையின் உற்பத்திகளா அடைக்கப்பட்ட பால், தயிர், நெய், பால் ரொபி, என்பன தயாரித்து விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. முல்லை பால் பதனிடும் தொழிற்சாலை கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வேலைக்காக ஓடிக் கொண்டிருபோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவது மட்டுமல்லாது கணவனை இழந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலருக்கு தொழில்வாய்ப்பினை வழங்கியுள்ளது.

இதன் மூலம் மாடுவளர்போருக்கு நிரந்தரமாக தொடர்ந்து குறித்த தொழிற்சாலைக்கு பாலினை விநியோகம் செய்யமுடியும். புலம்பெயர் தேசத்தில் வசித்து வரும் தவசீலன் என்பவரால் இயக்கப்பட்டு வரும் குறித்த முல்லை பால் தொழிற்சாலை தொடர்பில் உங்கள் நோக்கம் என்ன என அவரிடம் கேள்வி எழுப்பிய போது, எனக்கு இத் தொழிற்சாலையின் வருமானகளை புலம்பெயர் தேசத்திக்கு எடுத்துச் செல்லப் போவதில்லை இதனை மீள மீள இங்கு முதலிட்டு பலருக்கு வேலைவாய்ப்பு. வழங்குவதோடு மாடுவளர்ப்பினையும் ஊக்குவிக்கலாம்.

இதனால் எமது மாவட்டங்கள் எமது மாகாணங்களுக்கான பொருளாதரத்தை நாமே நிர்ணயிக்கலாம் எனது தொழிற்சாலை மட்டும் தான் இவ்வாறு செய்யலாம் என்பது அல்ல எனது நோக்கம் புலம்பெயர் தேசத்தில் உள்ள பலர் இவாறான தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் பலருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். மிகவும் நவீன முறையில் சுத்தமான முறையிலும் சுகாதாரமான முறையிலும் அமைக்கப்பட்டுள்ள குறித்த தொழிற்சாலையிலிருந்து வரும் தயாரிப்புக்கள் இப்பொழுது உள்ளூர் சந்தைகளில் இடம்பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தகது.

## VALLIBEL FINANCE MOVES TO MULTI-FACETED LOCATION IN RATNAPURA



Vallibel Finance moved its branch in Ratnapura to a new location recently. Located at the heart of Ratnapura in Main Street, the branch is poised to serve the diverse demands of a populous embracing a world of new opportunity. "The city of gems isn't merely confined to natural treasure but is well tuned to opportunity in a rapidly evolving world. Adding lustre to Ratnapura is its cascading plantations and trade which combine to enhance potential of the area once dependent on gemstones," said Managing Director,Vallibel Finance, Jayantha Rangamuwa at the opening. Sri Lanka's most respected finance company is right there with the people of Ratnapura, now even better placed to serve their financial needs, he said.

Rangamuwa reiterated that Vallibel's award-winning financial formula is for people in all corners of the country. Ratnapura with its multi-faceted economy - agriculture, trade and industry as it forays into the future can be assured that our financial solutions will be tailor-made for each individual who looks to us, he said. Vallibel Finance is no stranger to Ratnapura, having been an integral part of the landscape for seven and half years. The company is well poised for a long tenure from its new centre of excellence. Vallibel Finance continues to take firm roots across the country and deals primarily in Leasing, Gold Loans, Fixed Deposits, Group Personal Loans, Mortgage Loans, Education Loans, Auto Drafts and Microfinance products deployed via a cutting-edge technological framework.

## BRANDIX, CINEC TO SET UP TRAINING FACILITY



Brandix, with an employee base of 60,000 globally, has embarked on a milestone collaboration with the Colombo International Nautical and Engineering College (CINEC) to launch the Brandix–CINEC Centre of Excellence (BCCE), a facility to train and inspire the Group's workforce. Located within the CINEC Campus in Malabe, the Brandix–CINEC Centre of Excellence will facilitate joint training programs and research for the Apparel sector, following the recent signing of an agreement between the Brandix Group and CINEC, one of the largest non-state sector higher education institutions in Sri Lanka.

The BCCE will initially cater to the Associates and Supervisory grade employees of Brandix, offering programs covering technical topics and behavioural aspects as part of the curriculum at a later stage.


The signing of the agreement was followed by the induction of the first batch of trainees for the inaugural program designed for the Garment Technician position. "The focus of this initiative is to shape well-rounded individuals, following through on our commitment to create and foster inspired people," Dantanarayana said. The learning received at BCCE will be further enhanced with the support and guidance of the Vocational Technical Authority of Sri Lanka (VTA) to align the program content with that of the nationally-accepted NVQ qualification equivalent to a diploma, he said.

Senior Consultant of CINEC Campus, Admiral Thisara Samarasinghe explained to the trainees on the importance of being competent in the chosen vocation through knowledge and skills acquired through practical hands-on-training and personality development.

The Brandix Group has also signed two Memoranda of Understanding (MoU) with the VTA; one to create an NVQ Level 5 equivalent qualification for Garment Technicians – the first of that level in the Apparel industry, and the other to enable Brandix to identify and employ school-leavers who have received a three-month training as Industrial Sewing Machine Operators at the VTA's islandwide network of vocational training centres.

# தொழில்நுட்பச் செய்திகள்

## சந்திரனில் நீர் உள்ளதை உறுதி செய்தது நாசா




சந்திரனில் உறைந்த நிலையில் ஐஸ் படிமங்கள் உள்ளதால் அங்கு நீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். சந்திரனில் ஆய்வு செய்ய கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் இஸ்ரோ நிறுவனம் சந்திராயன்-1 என்ற விண்கலத்தை அனுப்பியது.

அந்த விண்கலம் மேற்கொண்ட ஆய்வில் சந்திரனில் உறைந்த நிலையில் ஐஸ் படிமங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவை கருப்பு நிறத்திலும், மிகவும் குளிராகவும் இருந்தது. எனவே இங்கு உறைந்த நிலையில் நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது என இஸ்ரோ தெரிவித்தது.

அது குறித்து அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அதில் சந்திரனின் தென் துருவத்தில் பெரும்பாலான ஐஸ் படிமங்கள் மிகவும் கடினமான நிலையில் அடர்த்தியாக உள்ளன. அதே நேரத்தில் வடதுருவத்தில் உள்ள ஐஸ் படிமங்கள் பரந்து விரிந்த நிலையில் அடர்த்தியற்று இருப்பது தெரிய வந்துள்ளது.

எனவே சந்திரனில் சந்திராயன்-1 விண்கலம் கண்டுபிடித்தது ஐஸ் படிமங்கள்தான். ஆகவே அங்கு தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

## சூரியனை நெருங்கி ஆய்வு செய்யும் நாசா



சூரியனை இதுவரை இல்லாத வகையில் நெருக்கமாகச் சென்று ஆய்வு செய்வதற்காக நாசா தயாரித்துள்ள செயற்கைக்கோள் இன்று விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

சூரியன் குறித்த் தகவலை திரட்டி வர கடந்த 1970 களில் விண்வெளிக்குச் சென்ற முதல் விண்கலமான ஹீலியஸ் 2 சூரியனை சுமார் 27 மில்லியன் மைல் தூரத்தில் இருந்துதான் ஆய்வு செய்ய முடிந்தது. அதனால் உலக அழிவை ஏற்படுத்தக்கூடிய சூரிய புயல் (ளுழடயச ுவைெ) தொடர்பான போதிய தகவல்களை இதுவரை திரட்ட முடியவில்லை.

ஒவ்வொரு நொடியும் பல்லாயிரக்கணக்கான டிகிரி செல்ஸியஸ் வெப்பத்தைக் கக்கும் சூரியனையே, சுமார் நாற்பது லட்சம் மைல்கள் தொலைவில் அல்லது மிக அருகில் சென்று ஆய்வு செய்யக்கூடிய பார்க்கர் சோலார் புரோப் எனும் செயற்கைகோளை நாசா அனுப்புகிறது. அமெரிக்க நேரப்படி இன்று அதிகாலை 3.30 மணிக்கு இது அனுப்பப்படுகிறது. புறப்படுவதற்கு 70 சதவீதம் வானிலை சாதகமாக உள்ளதாக நாசா கூறியுள்ளது.

சூரியன் மற்றும் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய சூரியப்புயல் அல்லது சூரிய பருவநிலை தொடர்பான புதிய தகவல்களை சேகரித்து பூமிக்கு அனுப்பக் கூடிய இந்த பார்க்கர் சோலார் புரோப், சூரிய பரப்பின் 64 லட்சம் கி.மீ பகுதியில் பறக்கும் என்றும், சுமார் 1,400 செல்ஸியஸ் (2,500 பாரனைட்) வெப்பம் மற்றும் மிகப்பெரிய கதிரியக்கத்தையும் தாங்கி, எதிர்கொண்டு ஆய்வு செய்யும் திறன்கொண்டது என்றும் கூறப்படுகிறது.

சூரியனின் வெப்பம் மிகுந்த கரோனா பகுதியில் பார்க்கர் சோலார் புரோப் பயணித்து ஆய்வு செய்யும். ஏனென்றால், இந்த செயற்கைகோள் அதீத தட்பவெப்ப நிலைகளைத் தாங்கும் சுமார் 11.4 செ.மீ (4.5 அங்குலம்) தடிமன் உள்ள கார்பன் காம்போசிட்டால் ஆன கவசத்தைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மணிக்கு சுமார் 7,25,000 கி.மீ வேகத்தில் பறக்கக் கூடிய திறன்கொண்ட பார்க்கர் சோலார் புரோப், சுமார் 6 வருடங்கள் மற்றும் 11 மாதங்களில் சூரியனை 24 முறை சுற்றி வந்து ஆய்வு செய்யும் என்கிறது நாசா.

# உலகச் செய்திகள்

## மோதல்கள் அற்ற ஆபிரிக்காவை உருவாக்கும் ஆபிரிக்க தலைவர்களின் மாநாடு



முன்னாள் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர் அல்பேர்டினா சிசுலு ஆகியோரின் நூறாவது ஆண்டு பிறந்த தினம் ஆகஸ்ட் 10 ஆம் திகதி அன்று இடம்பெற்றதை முன்னிட்டு மோதல்கள் அற்ற ஆபிரிக்காவை உருவாக்குவது தொடர்பில் ஆபிரிக்க தலைவர்கள் 2018 ஆபிரிக்க தலைவர்கள் சமாதான மாநாடு ஒன்றை ஹில்டன் ஹோட்டலில் ஜொஹன்னஸ்பர்க் தென் ஆபிரிக்காவில் நடத்தினார்கள்.

மோதல்கள் அற்ற ஆபிரிக்காவை உருவாக்குவது தொடர்பில் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. மொஸாம்பிக்கின் முன்னாள் ஜனாதிபதி மடகஸ்கரின் தேசிய சபையின் சபாநாயகர் பாவோகெங் நாட்டின் மகாராணி, சுவதினி நாட்டின் இளவரசர் துணை சபாநாயகர்கள் ஆபிரிக்க முன்னாள் துணை ஜனாதிபதிகள் உட்ட பலர் கலந்து-கொண்டனர்.

இம்மாநாட்டிற்கு ஆபிரிக்க சமாதானத்துக்கான தலைவர்களின் செயற்பாட்டுக் குழு சொர்க்க கலாசாரம், உலக அமைதி மற்றும் ஒளியை நிலை நிறுத்தல் (HWPL) சர்வதேச பெண்கள் சமாதானக்குழு, சர்வதேச சமாதான இளைஞர் குழு என்பன அனுசரணை வழங்கியிருந்தன. ஆபிரிக்க தலைவர்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பு செயற்பாடும் ஆபிரிக்காவின் 2063 நிகழ்ச்சி நிரல் அமுலாக்கம் என்பன குறித்து மீளாய்வு செய்யப்பட்டன.

சிம்பாப்வே நிலவரம் குறித்தும் ஆபிரிக்காவில் ஆண் மற்றும் பெண் தொடர்பில் கல்வி வேலைவாய்ப்பில் பாரபட்சம் குறித்தும் இம்மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது. இன்று உலகில் யுத்த நிறுத்தம் பரவலாகப் பேசப்படுகிறது. இன்று அனைவரும் நாடுவது சமாதானத்தையே அன்றி யுத்தத்தை-யல்ல. சமாதானக் கல்வியை எமது சிறுவர்கள் பெறுவதுடன் சமாதான கலாசாரத்தை சிறுவர்களுக்காக உருவாக்கவேண்டி-யுள்ளது என மொசாம்பிக்கின் முன்னாள் ஜனாதிபதி இம்மாநாட்டில் குறிப்பிட்டார்.

சமாதான பிரகடனம் மற்றும் யுத்த நிறுத்தத்தின் மூலம் உலகில் பரவலாக அமைதியைக் கட்டியெழுப்ப முடியும். எதிர்கால சந்ததிக்காக மட்டுமல்ல, தற்போதைய சந்ததிக்-குமாக உலகில் சமாதானம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என மொஸாம்பிக்கின் தேசிய சபையின் ஜனாதிபதி வெரோனிக்கா நாடனீல் மஹுமு தெரிவித்தார்.

நான் சமாதானத்தின் செயற்பாடு குறித்து உரையாற்ற ஆபிரிக்கா வந்துள்ளேன். சமாதானத்துக்காக உலகில் பாரிய எண்ணிக்கையானோர் செயற்பட்டுள்ளனர். ஆனால் இப்புவியில் சமாதானம் எந்த மட்டத்திலுள்ளது? பூமியில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை கட்டியெழுப்புவதை தவிர பெரிதாக வேறொன்றும் ஆற்ற முடியாத என இம்மாநாட்டிற்கு முக்கியமாக அனுசரணை புரியும் சர்வதேச தொண்டு நிறுவனமான (HWPL) அமைப்பின் தலைவர் மான் ஹிலி இம்மாநாட்டின்போது தெரிவித்தார். சுவாதினி நாட்டின் மன்னர் சார்பாக அந்நாட்டின் இளவரசர் ஹலாகு செனிபி பங்கேற்று உரையாற்றினார். இம்மாநாட்டின் நிகழ்ச்சிகள் யாவும் தென் ஆபிரிக்காவில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன.

## இலங்கையின் சமுத்திர பாதுகாப்பு மேம்பாட்டிற்கு ஜப்பான் ஒத்துழைப்பு

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரண்டு நாள் உத்தியோபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சுநோரி ஒனொடேரா (Itsunori Onodera) மற்றும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு இன்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றபோதே இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.



ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ஜனாதிபதி, ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சரை மிகுந்த சிநேகபூர்வமாக வரவேற்றார்.

ஜனாதிபதி அண்மையில் மேற்கொண்டிருந்த ஜப்பானுக்கான அரச முறை விஜயத்தின்போது ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதுடன், இலங்கைக்கும் ஜப்பானுக்-குமிடையிலான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்-துதல் தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்-பட்டது.

ஜனாதிபதி மற்றும் ஜப்பானின் பிரதமர் சின்ஷோ அபே ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறாக இலங்கையின் கரையோர பாதுகாப்பு நடவடிக்-கைகளுக்காக 1.8 பில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு கரையோர பாதுகாப்பு இயந்திரங்களை அண்மையில் ஜப்பான் அரசாங்கம் வழங்கியிருந்ததுடன், அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார்.

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் தனது இரண்டு நாள் விஜயத்தின்போது ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோண-மலை துறைமுகங்களுக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி இருநாடுகளுக்-கிடையிலும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பாக நடைமுறைப்-படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களினூடாக எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் விருத்தியடையுமென தான் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

## அரசியல் நெருக்கடி அவுஸ்திரேலியாவில் தொடரும் அறிகுறி



லிபரல் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்காக மீண்டும் பிரதமர் மல்கம் டேர்ன்புலுடன் மோத தயார் என பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார். எனக்கு உரிய எண்ணி-க்கை கிடைத்தால் நான் மீண்டும் தலைமைத்துவத்தை கைப்பற்றுவதற்கான சவாலிற்கு தயார் அதற்காக நான் தொலைபேசி மூலம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். நான் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றால் ஜிஎஸ்டியை மின்கட்டணங்களில் இருந்து நீக்குவேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலியாவின் எரிசக்தி நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய ரோயல் ஆணைக்குழுவொன்றை அமைக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய நுகர்வோர்கள் நீண்ட காலமாக எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக பெரும் தொகையை செலவிடுகின்-றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தற்போதைய பிரதமர் தெரிவிப்பதை மக்களால் புரிந்துகொள்ள முடிய-வில்லை எனவும் டட்டன் தெரிவித்துள்ளார். எங்கள் செய்தி-கள் குறித்து நாங்கள் மிக தெளிவாகயிருத்தல் வேண்டும், எங்கள் கொள்கைகள் நாட்டிற்கான எங்கள் நோக்கங்கள் குறித்து தெளிவான விதத்தில் கருத்துக்களை வெளியிட-வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். தற்போது அரசாங்-கத்தின் கொள்கைகளை புரிந்துகொள்ள முடியாமல் மக்கள் தடுமாறுகின்றனர் எனவும் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை லிபரல் கட்சியின் கூட்டத்தை கூட்டுமாறு வேண்டுகோள் விடுக்கும் கடிதமொன்று கட்சியின் நாடாளு-மன்ற உறுப்பினர்கள் மத்தியில் பரிமாறப்படுகின்றது மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக கைச்சாத்-திட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன

லிபரல் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பீட்டர் டட்டனின் ஆதரவாளர்களே இந்த கடிதத்தை விநியோகித்து வருகின்றனர். கட்சியின் கூட்டம் இடம்பெற்றால் மீண்டும் பிரதமரின் தலைமைக்கு ஆபத்து ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக ஸ்கொட் மொறிசன் பதவியேற்றார்



அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக ஸ்கொட் மொறிசன் சற்று முன்னர் பதவியேற்றுள்ளார். அவுஸ்திரேலிய கவர்னர் ஜெனரல் ஜோஸ் பிரைடன்போர்க் முன்னிலையில் ஸ்கொட் மொறிசன் பதவியேற்றுள்ளார். ஒருவார கால அரசியல் நெருக்கடிக்கு பின்னர் அவுஸ்திரேலிய பிரதம பதவியிலிருந்து மல்கம் டேர்ன்புல் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து ஸ்கொட் மொறிசனை கட்சி தலைமை பிரதமர் பதவிக்கு நியமித்திருந்தது.

இதனை தொடர்ந்து அவர் பிரதமராக பதவியேற்றுள்ளார். லிபரல் கட்சியின் தலைமைத்துவதற்காக இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஸ்கொட் மொறிசன் 45-40 என்ற அடிப்படை-யில் பீட்டர் டட்டனை தோற்கடித்துள்ளார். கட்சியின் தலைமைக்காக ஒரு வார காலத்திற்குள் இரண்டாவது தடவை இடம்பெற்றகட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலான வாக்கெடுப்பிலேயே ஸ்கொட் மொறிசன் வெற்றி பெற்றுள்ளார். கட்சியின் தலைமைத்துவதற்கான போட்டியில் இம்முறை பிரதமர் மல்கம் டேர்ன்புல் போட்டியிடாதது குறிப்பிடத்தக்கது.

இந்த வாக்கெடுப்பின் பின்னர் கருத்து தெரிவித்துள்ள டேர்ன்புல் விரைவில் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறு-வேன் என குறிப்பிட்டுள்ளார். எனது கட்சிக்குள் காணப்பட்ட பழிவாங்கல் சுயநலம் உட்கட்சி மோதல் ஆகியனவே நான் பதவி விலகும் நிலையேற்பட்டதற்கு காரணம் என டேர்ன்புல் குறிப்பிட்டுள்ளார்.

## பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு தமிழ்நாடே காரணம்- கேரளா பரபரப்பு குற்றச்சாட்டு

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து தமிழகம் தண்ணீர் திறந்துவிட்டதன் காரணமாகவே கேரளாவில் வெள்ளப்-பெருக்கு ஏற்பட்டது.....

தொடர்ச்சி. பக்கம் 31இல் . . .

பக்கம் 30இன் தொடர்ச்சி. . . . என கேரள மாநில அரசாங்கம் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.



உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் கேரள அரசாங்கம் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. முல்லைப்பெரியாறு அணையிலிருந்து தமிழகம் திடிர் என நீரை திறந்துவிட்டதே கேரளாவில் மிக மோசமான வெள்ளம் ஏற்படக்காரணம் என நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் கேரள அரசாங்கம் தெரிவித்துள்ளது. அணையின் கீழ் பகுதியில் இருக்கும் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு தமிழக அதிகாரிகள் போதிய காலஅவகாசத்தை வழங்கவில்லை எனவும் கேரள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எந்த முன்னறிவிப்பும் இன்றி தமிழக அரசு முல்லைபெரியாறு அணையிலிருந்து நீரை திறந்துவிட்டுள்ளது, என தெரிவித்துள்ள கேரள அரசு கொஞ்சம் கொஞ்சமாக நீரை திறக்கவேண்டும் என்ற எங்கள கோரிக்கையை தமிழக அரசு ஏற்கவில்லை என குற்றம்சாட்டியுள்ளனர்.

## பிரபாகரனின் மரணத்தினால் நான் மகிழ்ச்சியடையவில்லை - ராகுல்காந்தி



விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டது குறித்து நானும் எனது சகோதரியும் மகிழ்ச்சியடையவில்லை என காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். ஜேர்மனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். நான் எனது குடும்பத்தை சேர்ந்த இருவரை வன்முறை காரணமாக இழந்தேன் என ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

எனது பாட்டியும் எனது தந்தையும் கொல்லப்பட்டனர், ஆகவே நான் வன்முறைகளால் துயரை அனுபவித்துள்ளேன் நான் அந்த அனுபவத்திலிருந்து பாடம் கற்றுள்ளேன் என ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். மன்னிப்பதன் மூலமே வன்முறையின் பின்னர் முன்னோக்கி நகரமுடியும் இதனை தவிர வேறுவழியில்லை, எனவும் குறிப்பிட்டுள்ள ராகுல்காந்தி மன்னிப்பதற்கு என்ன நடந்தது ஏன் நடந்தது என்ற தெளிவு அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை எதிர்கொள்வதற்கு செவிமடுப்பதும் அகிம்சை வழியில் செயற்படுவதும் முக்கியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் இது பலவீனம் என கருதுகின்றனர் ஆனால் அதுவே உண்மையான பலம் எனவும் ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார். எனது தந்தை 1991 இல் பயங்கரவாதியால் கொல்லப்பட்டார். 2009இல் எனது தந்தையை கொன்றவர் இலங்கையில் கொல்லப்பட்ட நிலையில் காணப்படுவதை நான் பார்த்தேன் எனவும் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

நான் எனது சகோதரியை அழைத்து இது மிகவும் ஆச்சரியமாக உள்ளது ஆனால் நான் இதனால் மகிழ்ச்சியடையவில்லை என தெரிவித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மரணித்தவர் எனது தந்தையை கொன்றவர் என்பதால் நான் அவரின் மரணத்தை கொண்டாடவேண்டும். ஆனால் ஏனோ நான் அந்த மரணத்தினால் மகிழ்ச்சியடையவில்லை எனவும் எனது சகோதரியிடம் தெரிவித்தேன் என ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதற்கு எனது சகோதரி நானும் மகிழ்ச்சியடையவில்லை என தெரிவித்தார் என ராகுல் காந்தி மேலும் குறிப்பிட்டுள்ளார். நான் பிரபாகரனின் பிள்ளைகளில் என்னை பார்த்ததே நான் மகிழ்ச்சியடையாததற்கு காரணம், எனது தந்தையின் மரணத்தின் போது நான் அழுதது போன்று பிரபாகரனின் மரணத்தின் போது அவரின் பிள்ளைகள் அழலாம் என நான் நினைத்தேன் எனவும் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் தீயவராகயிருக்கலாம், ஆனால் என்னை எனது தந்தையின் மரணம் பாதித்தது போன்று, அவரிற்கு எதிரான வன்முறைகள் ஏனையவர்களை பாதித்துள்ளன எனவும் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். நீங்கள் ஆழமாக சிந்தித்தால் இந்த வன்முறையை தூண்டிய ஏதோவொன்று இருக்கவேண்டும்,அது தற்செயலான சம்பவம் இல்லை, அவருக்கு அல்லது வேறு யார்றிகோ எதிராக இடம்பெற்ற வன்முறைகள், நடவடிக்கைகள் வன்முறைகளை தூண்டியிருக்கலாம் எனவும் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவிற்கு ஈரான் கடும் எச்சரிக்கை



அமெரிக்கா தனது நாட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிற்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ளப்போவதாக ஈரான் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. பொருளாதார தடைகளிற்கு அப்பால் ஈரான் மீது மேலும் கடுமையான அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகிக்கலாம் என ஜனாதிபதி டிரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொல்டொன் தெரிவித்துள்ளதை தொடர்ந்தே ஈரான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஈரானுடன் யுத்தத்தில் ஈடுபட்டால் அமெரிக்கா அதற்காக பெரும் விலையை செலுத்தவேண்டியிருக்கும் என ஈரானின் ஆன்மீக தலைவர் அயத்தொல்லா அலி கமேனிற்கு நெருக்கமான மூத்த மதகுருவொருவர் தெரிவித்துள்ளார். அவர்கள் இந்த நாட்டிற்கு தீங்கு விளைவித்தால் அவர்களிற்கும் பிராந்தியத்தில் அவர்களுடைய நேசநாடான இஸ்ரேலும் இலக்குவைக்கப்படும் என்பது அவர்களிற்கு தெரியும் என ஹகமட் கட்டாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கண்டங்களிற்கு இடையிலான ஏவுகணை திட்டத்தை கைவிடவேண்டும் என்ற அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் தொடர்ந்தும் ஏவுகணை திட்டத்தை முன்னெடுக்கப்போவதாக ஈரானின் புரட்சிகர இராணுவம் தெரிவித்துள்ளது. ஈரானுடனான ஒபாமா காலத்து அணுவாயுத உடன்படிக்கையை டிரம்ப் நிர்வாகம் இரத்து செய்து மீண்டும் தடைகளை விதித்த பின்னர் இரு நாடுகளும் கடுமையான வார்த்தைப்போரில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா இந்த மாதம் ஈரானின் கார் வர்த்தகம் மற்றும் தங்க தொழில்துறையை மையமாக வைத்து தடைகளை அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் நவம்பர் மாதம் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்கு எதிராக கடுமையான தடைகளை விதிக்கப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதியை கொழும்பில் சந்தித்த சுப்ரமணியன் சுவாமி



இலங்கைக்கு வருகை தந்துள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கிய அரசியல்வாதியான சுப்ரமணியன் சுவாமி மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரைடியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரரான மறைந்த சந்திரர் டியூடர் ராஜபக்ஷவிற்கு அஞ்சலி செலுத்த இலங்கை வந்துள்ள பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய அரசியல்வாதியான சுப்ரமணியன் சுவாமி, மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டுடன் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு இன்று கொழும்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கொழும்பில் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்ததாக சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கொழும்பில் இன்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நசீட்டை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எதிர்வரும் தேர்தலில் கள்ளவாக்களித்தல் உட்பட பாரிய மோசடிகள் இடம்பெறலாம் என அவர் அச்சம் கொண்டுள்ளார். அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியா இதற்கு அனுமதிக்க முடியாது. மேலும் மாலைதீவில் சமீபத்தில் ஏற்பட்ட குழப்பநிலையை தொடர்ந்து தற்போதைய ஜனாதிபதி யமீன் இந்தியர்களை அதிகளவு அவமானப் படுத்தியுள்ளார். எங்களிற்கு செயல்திட்டம் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவிற்கு அமைதிப் புறாவை டுவிட்டரில் தூதுவிட்ட இம்ரான் கான்!




பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் இம்ரான் கான் அமைதிப் பேச்சுவார்த்தை நடாத்த வருமாறு இந்தியாவிற்கு தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அழைப்பு விடுத்துள்ளார். இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டு மறுபுறம் பயங்கரவாத தாக்குதல்களை கடந்த கால நவாஷ் ஷெரீப் தலைமையிலான அரசாங்கம் ஊக்குவித்தமையால் இந்தியா பாகிஸ்தானுடனான அமைதிப் பேச்சுவார்த்தையை நிறுத்திக்கொண்டது. தற்போது பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம் எற்பட்டுள்ள நிலையில் புதிய பிரதமராக இம்ரான் கான் பதவியேற்றுள்ளார்.

பிரதமராக பதிவியேற்றுள்ள இம்ரான் கான் அதிரடியாக பல செயற்பாடுகளில் இறங்கியுள்ளார். அந்த வகையில் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இம்ரான் கான், இந்தியாவும் பாகிஸ்தானும் முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு கண்டிப்பாக பேச்சுவார்ததை நடாத்த வேண்டும் காஷ்மீர் உள்ளிட்ட மோதல்களை தீர்த்துக்கொள்ள வேண்டும். வறுமையை ஒழித்துக்கட்டி விட்டு துணைக்கண்டத்தில் உள்ள மக்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு நமது கருத்து வேறுப்பாடுகளை தீர்த்துக்கொண்டு வர்த்தகத்தை தொடங்குவது தான் சிறந்த வழி என்று டுவிட் செய்துள்ளார்.

## மக்களின் குடியிருப்புகளுக்கு படையெடுக்கும் பாம்புகள் பெரும் அச்சத்தில் கேரள மக்கள்

இந்தியாவின், கேரள மாநிலத்தில் பெய்த கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அவ்வகையில் தற்போது வெள்ள நீர் வடிந்தோடிய பின் மக்கள் அவர்களின் இயல்பு நிலையை தொடங்குவதற்கு தத்தமது குடியிருப்புகளை சுத்தம் செய்து வருகின்றனர். எனினும் குறித்த பாதிப்புக்குள்ளான மக்களின் வீடுகளில் பாம்புகள் படையெடுத்து அங்குகுடி கொண்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கழிவுகள் நிறைந்து வீடுகள் காணப்படுகின்றமையினால் தமது குழந்கைளை வைத்துக்கொண்டு சுத்தம் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக கேரள மக்கள் தெரிவிக்கின்ற நிலையில், இவ்வாறு விசப் பாம்புகள் அனைத்தும் வீட்டுக்குள் படையெடுத்துள்ளமையால் மக்கள் வீடுகளை சுத்தம் செய்வதிலும் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

SRI DURGA GANAPATHI ASTROLOGICAL CENTRE
Pandit : Govinda Raju
World Famous Astrologer
Are You Suffering Any Problems :

Pandith Govinda Raju in an expert in Palm Reading, Face Reading, Photo Reading, Numerology, Epemeris, Horoscop 100 years Shatabdi Panchangam, Lucky Stones & Vastu Shastra.

Present & Future of Your Life Sickness, Education, Employment, Business, Marriage, Court Enemy, Black Magic, Secret Matters & Etc.,

100% Guaranteed Results.

Long Live Protection

Contact : London 329/326, Bath Road, Hounslow West, Post code : TW4 7HW, LONDON. +44-7405666293.


# POLITICAL NEWS

### RAJAPAKSA FEARS GOTABHAYA'S RISE TO POWER: INDUNIL



Former President Mahinda Rajapaksa and his kin fear the political success of the three Rajapaksa brothers; Gotabhaya, Basil and Chamal; Parliamentarian Thushara Indunil said. He was addressing a press briefing held at the United National Party Headquarters.

"If Gotabhaya rises to power, they know that Mahinda or his son would not be able take it from him. They also fear that the leadership of the Pohottuwa party will go to Gotabhaya as well. They fear Basil Rajapaksa, as he has a keen political sense. If Chamal comes to power, they fear his son Shashindra Rajapaksa would be next in line," Indunil added. He said it was the reason the former President wished to be the next Presidential candidate, adding that it had created a rift in the Joint Opposition (JO), with some supporting Gotabhaya Rajapaksa, some Basil and others Chamal.

The MP added that programmes such as Viyath Maga, Hari Maga and Eliya, had faded into the background. "Both Gotabhaya and Basil Rajapaksa had left to their homes in America. One said he was visiting family, while the other claimed that he was going for medical purposes," Indunil said. "Former President Mahinda Rajapaksa rendered a great service by ending the civil war in this country, although he now holds a minute position as an MP, similar to us. However, Mahinda's attempt to become a Presidential candidate again only taints his image," MP Indunil added.

He said the JO was attempting to strengthen their presence in politics. "They claim that they would come to power in future. They said they would topple the government. During the recent local government elections, they deceived people, saying that their votes would make Mahinda Rajapaksa the Prime Minister. The JO may repeat itself in September as well," he added.

Highlighting the recent incident regarding former President Rajapaksa's private secretary Udith Lokubandara, the parliamentarian said that he sympathised with him. "The country laughed at Lokubandara; social media made a joke of him. If this is the way the Rajapaksas treat people who dedicated their lives to them, imagine how they would treat people such as Keith Noyahr," he said. Highlighting Keith Noyahr's case, MP Indunil said that Mahinda Rajapaksa could not evade the matter by saying he had no recollection of it.

Rajapaksa was the one who held the "remote control" of Noyahr's attack, Indunil alleged. MP Indunil questioned as to how the former President wished to rule a country if his memory failed him to that extent.

### ACTED CONSTITUTIONALLY IN OPPOSITION LEADER POST RULING - SPEAKER



The decision regarding the post of Opposition Leader was taken by the Speaker after extensive study and probing ideas and views of local and foreign experts and traditions followed by other democratic countries in the Commonwealth, the Speaker's office in a press release stated.

Letters sent by former General Secretary late Prof. Viswa Warnapala and incumbent UPFA General Secretary Mahinda Amaraweera dated 01-09-2015 and 06-08-2018 as well as their recommendations were also taken into cognizance in making this decision. Furthermore, the proposal containing standing order no 47(1) 6 adopted on September 5 by 143 members of Parliament was taken into consideration in making this decision, the release said.

"It has been observed that certain Opposition members had criticised the decision taken by the Speaker regarding the post of Opposition Leader and used it to publish malicious and defamatory statements against the Speaker through the media. They have made these false allegations without understanding the different backgrounds which existed during the appointment of opposition leaders on earlier occasions and the appointment made of the first time under under a national government concept the release added.

The release said speaker Karu Jayasuriya had acted independently devoid of political considerations and without succumbing to any pressure since he accepted the post on 01-09-2015. He has not visited an office of any political party including the UNP and always acted apolitically in an independent manner.

The normal traditions in democratic countries in the world is to accept the Speaker's decision or else take the next necessary step regarding it in a democratic manner.

Without doing this just because one's opinion was not accepted, attacking opposing views and character assassination of individuals and subjecting them to degrading criticism would not be condoned by a disciplined and cultured society, the release said.

### TNA TURNS DOWN WIGGIE'S REQUEST TO BOYCOTT TASK FORCE MEETING



The Tamil National Alliance (TNA) on Thursday turned down Northern Province Chief Minister C.V. Wigneswaran's request to boycott the meeting of the Presidential Special Task Force on Northern Development which is scheduled to be held on August 27. TNA Parliamentarians at a meeting held at the Opposition Leader's office under the patronage of TNA leader R. Sampanthan on Thursday insisted that they should participate in this meeting to ensure development of the Northern Province.

They were of the view that development activities should continue in the North which was badly battered by the 30-year protracted war. These Parliamentarians stressed the importance of participating in this Task Force meeting to find solutions to the burning issues of the Tamil people, that included releasing their lands occupied by the Security Forces.

Northern Province Chief Minister Wigneswaran in a letter to TNA leader R. Sampanthan had requested that the TNA should not support any development activity conducted by the government until a political solution is given to the ethnic issue. Wigneswaran added that Tamil political representatives in the Northern Province had arrived at an unanimous decision not to join any committee or organization of the government until a solution is given to the Tamil peoples' issue.

He added that Several Ministers and Security Forces officials have been included in this Speical Task Force and questioned as to why military officials have been appointed to the Special Task Force on Northern Development, which is solely aimed at bringing economic development to the Northern region.

"The TNA should decide whether it needs economic development or a political solution first," Wigneswaran had stated in his letter to Sampanthan.

ENGLISH NEWS

### FAMILY BUDGET UNIT TO HELP WITH HOME ECONOMY OF FAMILIES



The new Family Budget Unit will look into solving the economic issues faced by families in the country and look into a family's expenditure, income and the ways in which the country's economy impacts individual families, said Prime Minister Ranil Wickremesinghe. The Prime Minister was speaking at the new Family Budget Unit of the Ministry of National Policies and Economic Affairs which would look into the family economy which held its inaugural meeting at Temple Trees yesterday.

"We have started a new unit under the Ministry of National Policies and Economic Affairs- the Family Budget Unit. We have information on the national economy and we turn that information into action. But, we need to gather more information on the home economy," the Prime Minister said. "When we speak of the Cost of Living, we need to emphasise on essential food items. But today, home expenditure does not only include essential foods, it includes many other expenses. Transport, clothes, tuition fees, telephone bills, rent, pre-school fees, etc... And some families spend more money on these than food," the Prime Minister further said.

"Thus, the new unit will look into what the main expenses in a family are, the average income of a family and what is the impact of the country's economy on the family," the Premier said. "We have prepared a developing economy for the people so that they can live. We have given them many concessions and we will take a look at these once again and the government will adjust these subsidies according to the available finances. This will be important for the new unit," the Prime Minister said. State Finance Minister Eran Wickremaratne, National Policies and Economic Affairs, Deputy Minister Dr. Harsha de Silva, Secretary to the Prime Minister Saman Ekanayake, National Policies and Economic Affairs Minister Secretary K.D.S. Ruwan Chandra and Finance and Mass Media Secretary Dr. R.H.S.Samaratunga were also present at the meeting.

### DELIMITATION REPORT ON PCS BEFORE HOUSE



The Delimitation Report demarcating provincial boundaries, prior to conducting Provincial Councils (PC) polls will be presented to Parliament on August 24, Mega Polis and Western Development Minister Patali Champaka Ranawaka.

The Minister added that the Elections Commisison can hold the Provincial Council election based on this report if it is adopted in Parliament on August 24. Minister Ranawaka said the forthcoming Provincial Council election should be conducted under the PR system and elections thereafter should be hold under new electoral system. The Minister was speaking at a press conference held at the JHU headquarters in Battaramulla. JHU Provincial Councillor Nishantha Warnasinghe was of the view that Provincial Council election should not be put off citing legal and technical matters.

### PRESIDENT PROMISES PROSPEROUS FUTURE FOR FARMERS



President Maithripala Sirisena yesterday said at present there are many projects being implemented to uplift the lives of farming community and to make their lives prosperous. The President was speaking at the commencement of the Second Stage of the Wayamba Ela to be built at a cost of Rs.16,000 million, in Polpithigama, yesterday.

Meanwhile, the inauguration ceremony of renovating 2,400 rural tanks connected with "Ellanga Gammana" or Cascaded Tank-Village system in the Dry Zone was also held under the patronage of the President near the Kubukulawa Tank, Polpithigama. President Sirisena told the farming community at the Polpithigama Public Ground that he has a good understanding regarding the issues faced by the country's farmers. 'Today, through a speedy procedure, solutions are provided for the long standing water issue faced by the farmers," the President said.

He added that the Paddy Marketing Board is playing a vital role in giving a good price for paddy. The President pointed out to the adverse effects experienced by us as a result of climate and environmental changes that the country faced during the past few years.

"According to recent reports, Sri Lanka has reached the fourth place among the world's worst affected countries,due to advesrse weather and climate changes," the President said. The President said 50 years ago, Sri Lanka secured the 97th place in the climate report and due to the enormous environmental destruction caused by various racketeers, the country is faced with such a situation at present.

The President said the completion of the Second Stage of the Wayamba Ela project, will provide thousands of cubic feet of water from the Mahaweli River to the Northern area of the Kurunegala District. Thus, water will be provided for cultivations in the Polpithigama, Ahatuwewa, Mahawa and Ambanpola Divisional Secretariats during both the Yala and Maha seasons, together with fulfilling the drinking water needs of the people living in those areas.

Around 12,500 hectares of lands will be cultivated under the Wayamba Palath Ela project where irrigational water for 13,000 farmer families is to be provided. In addition, when considering the drinking water planning facilities provided under this project, the number of families benefited through this will be 40,000 in amount. Thus, water of Mahaweli River will be channeled to 315 small rivers and eight main rivers belonging to the Mee Oya, Hakwatuna Oya, and Kala Oya drones. The main cannel built for that is 9 km in length.

The project, which became a reality due to the strong determination of President Maitheripala Sirisena will be provided monetary aid by the Asian Development Bank and the Sri Lankan Government. The first stage of this project is to be completed in 2019 and the second stage in 2024.

The Ellanga system project, which reconstructs 2,400 reservoirs is a project initiated to reconstruct the reservoirs that aren't activated in dry areas and to channel irrigational water for those people. Work of the second stage of the Wayamba Ela was also initiated by the President after unveiling the Commemoration plaque. The Wayamba Ela Development office was also opened by the President.

Nine Water purification systems which were built to provide clean water to the people where kidney disease is prevalent were vested with the public by the President through the long distance communication system. Ministers Gamini Jayawickrama Perera, S.B.Nawinne, Duminda Dissanayake, Mahinda Amaraweera, Dayasiri Jayasekara, public representatives of the North Western Province, Secretary to the President Udaya. R.Seneviratne, Mahaweli Development and Environment Ministry Secretary Anura Dissanayake, engineers in charge of the project,Security Forces Heads and the Inspector-General of Police were present.

### BE UNITED TO ENSURE BETTER FUTURE: PM

The Hajj festival demonstrates the importance of unity and commitment in guiding the world to achieve long-lasting peace, stated Prime Minister Ranil Wickremesinghe in a message marking Hajj. He called on all Sri Lankans to be united as a nation to ensure a better future for the country. The full text of the Prime Minister's message: "Hajj pilgrimage is considered to be one of the five pillars of Islam, which should be performed by all Muslims, who are physically and financially capable, at least once in a lifetime.

Hajj marks the end of the period during which Muslims across the globe journey to Mecca in Saudi Arabia to reassure their faith in God. The expenses for the journey will be borne from what they earned through labour. The Hajj is a religious festival where the pilgrims from all walks of life come together and pray for world peace. The message of equality and unity that they send to the world is important to all nations.

Muslims also commemorate the offer made by Prophet Ibrahim to sacrifice the life of his son, Prophet Ismail to God, during this festival. Hajj provides the entire world with the inspiration necessary for leading a life of charity in order to develop peace and collaboration among us. The festival demonstrates the importance of unity and commitment in guiding the world to achieve long-lasting peace.

Similarly, in Sri Lanka, we must be united as a nation to ensure a better future for our country. I wish all Muslims who come together for Hajj and all those who will be celebrating Eid-ul-Adha peace and prosperity!"

### PERMANENT HIGH COURT- AT-BAR DECLARED OPEN

The first Permanent High Court-at-Bar set up to hear high-profile financial frauds and corruption cases was declared open by Justice Minister Thalatha Athukorale. Accordingly, the mandate paper pertaining to this High Court was handed over to the Registrar of the Special High Court by Minister Thalatha Athukorale to carry out court proceedings.

Justice Minister Thalatha Athukorale told the media that the government was able to fulfill one of its responsibilities by establishing this Special High Court in order to expedite the high-profile financial frauds and corruption cases. The Minister further said that she will not hesitate to take stern action against the wrongdoers in prisons, irrespective of protest campaigns against new reforms.

The first case at the Permanent High Court-at-Bar will be heard on August 24. This is against former President Mahinda Rajapaksa's Chief of Staff Gamini Sedara Senarath, former Sri Lanka Insurance Corporation Managing Director Piyadasa Kudabalage, former Samurdhi Commissioner Neil Bandara Hapuwinna and Lasantha Bandara for transferring of Rs.500 million from Litro Gas to Canwill Holdings Pvt Limited. The Chief Justice had appointed three High Court judges to hear the cases in the country's first special High Court.

The special Trial-at-Bar will comprise the three High Court Judges Sampath Abeykoon, Sampath Wijeratne and Champa Janaki Rajaratne. The Cabinet had given its approval to establish three Anti-Corruption High courts. This is the first Special High Court that established within the Hulftsdorp Court complex to try high-profile cases. The Government presented the Bill on March 6 to set up a permanent High Court-at-Bar to expedite cases of large scale corruption and financial crimes.

This special court will hear cases involving money laundering, bribery and large financial crimes, dishonest misappropriation of property, and criminal breach of trust by public servants daily.

# CULTURAL CENTRE FOR TAMILS

# தமிழர் கலாச்சார மையம்

## தாயகத்திற்கான பொதிகள் சேவை

1) உங்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படும்

2) இலாப நோக்கமற்ற சேவை

3) ஒப்பற்ற மலிவு விலை

4) உரிய முறையில் வினயோகம்

5) தீர்வை வரிச்சலுகை

6) உங்களிடத்தில் நாம் பெற்றுக்கொள்ளுதல்

7) ஒவ்வொரு மாத இறுதியில் உங்கள் பொதிகள் அனுப்பப்படும்

8) நேரடியான தாயகத்திற்கான சேவை

9) தரும நிறுவனத்திற்கான முன்னுரிமை

10) சென்றடையும் காலத்தை உறுதிப்படுத்தலாம்

Calculated in Volume

| | | |
|---|---|---|
| Box size D | 60cm X 60cm X 45cm (160.000 – 170.000) | £39.50 |
| Box size E | 60cm X 45cm X 45cm (120.000 – 130.000) | £30.00 |
| Box size F | 45cm X 45cm X 45cm (90.000 – 100.000) | £22.50 |
| Box size H | 45cm X 45cm X 30cm (6.000- 7.000) | £15.00 |

Calculated in Weight

| | | |
|---|---|---|
| Box size K | Weight 15Kg to Max 20Kg (Upto 21.000g) | £39.50 |
| Box size L | Weight 10Kg to Max 15Kg ( Upto 15.750g) | £30.00 |
| Box size M | Weight 5Kg to Max 10Kg (Upto 10.500g) | £22.50 |
| Box size N | Weight Max 5Kg (Upto 5.500g) | £15.00 |

**YOU CAN SEND THE PARCELS WEIGHTED MINIMUM OF 5KG AND THE MAXIMUM OF 20KG**

**எமது தாயகத்திகான பொதிகள் சேவைக்கான முகவர்களாகச் செயற்பட விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொண்டு உங்கள் பணியைத் தொடர நாம் வழி சமைத்துத் தருவோம்.**

**விருப்பம் உள்ளவர்கள் எம்மை அணுகவும்.**

## தொடர்புகளுக்கு : 0790 843 7921

**உங்கள் பொதிகளை கீழே உள்ள முகவரியில் ஒப்படைக்கலாம்**

**HAYES :** EELATHU SUVAI, 598 UXBRIDGE ROAD, HAYES UB4 0RY

**RAYNERS LANE :** KRONO ESTATE AGENT

**EASTHAM :** SSR SILK HOUSE, EASTHAM

**TOOTING :** SRI MURUGAN FLOWER SHOP, 285, MICHAM ROAD, LONDON SW17 9JQ

**EDGWARE :** SRI THURKKAA CASH & CARRY, 6-7 NORTH PARADE, MOLLISON WAY, EDGWARE. HA8 5QU

**CROYDON - MITCHAM :** SERANS, 689, MITCHAM ROAD, CROYDON. CR0 3AF

**WEMBLEY :** VEL ESTATE LTD, 12B, STANLEY HOUSE, STANLEY AVENUE, WEMBLEY HA0 4JB

# இந்து சமய விசேட தினங்கள்



| | | |
|---|---|---|
| 23.08.2018 | வியாழக்கிழமை | பிரதோஷம் |
| 24.08.2018 | வெள்ளிக்கிழமை | வரலட்சுமி விரதம் நடேசரபிஷேகம் |
| 25.08.2018 | சனிக்கிழமை | பௌர்ணமி ஆவணி அவிட்டம் |
| 27.08.2018 | திங்கட்கிழமை | கொடியேற்றம் வொல்தம்ஸ்றோ சித்தி விநாயகர் |
| 29.08.2018 | புதன்கிழமை | சங்கடகர சதுர்த்தி |
| 02.09.2018 | ஞாயிற்றுக்கிழமை | கிருஷ்ண ஜெயந்தி |
| 05.09.2018 | புதன்கிழமை | ஏகாதசி |
| 06.09.2018 | வியாழக்கிழமை | மாம்பழத்திருவிழா வொல்தம்ஸ்றோ சித்தி விநாயகர் |
| 07.09.2018 | வெள்ளிக்கிழமை | பிரதோஷம் மாம்பழத்திருவிழா வொல்தம்ஸ்றோ சித்தி விநாயகர் |

# செட்டிநாடு நண்டு வறுவல்



என்னென்ன தேவை?

சுத்தம் செய்த நண்டு - 8.
இடித்த சின்ன வெங்காயம் - 1.
பொடியாக நறுக்கிய தக்காளி - 1.
இஞ்சி, பூண்டு விழுது - 1 டீஸ்பூன்.
கறிவேப்பிலை - 1 கொத்து.
மஞ்சள்தூள் - 1.̇.2 டீஸ்பூன்.
உப்பு, எண்ணெய் - தேவைக்கு.
அரைக்க:
தேங்காய்த்துருவல் - 1.̇.4 கப்.
பெருஞ்சீரகம் - 1 டீஸ்பூன்.
கசகசா - 1 டீஸ்பூன்.
கரம்மசாலா - 1.̇.2 டீஸ்பூன்.
காய்ந்த மிளகாய் - 7.

எப்படிச் செய்வது?

காய்ந்த மிளகாயை சிறிது நேரம் வெந்நீரில் ஊற வைத்து மைய அரைக்கவும். தேங்காய்த்துருவல், கசகசா. பெருஞ்சீரகம், கரம் மசாலாவை அரைத்து விழுதாக்கவும். கடாயில் எண்ணெய் சேர்த்து கறிவேப்பிலை தாளித்து, நசுக்கிய வெங்காயம், தக்காளி, இஞ்சி, பூண்டு விழுது, காய்ந்த மிளகாய் விழுது... என ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். பின் மஞ்சள்தூள், உப்பு, நண்டு சேர்த்து வதக்கி, தேவையான அளவு நீர் சேர்த்து வேகவிடவும்.
நண்டு வெந்ததும் அரைத்த தேங்காய் மசாலாவை சேர்த்து கிளறி மேலும் 5 நிமிடங்கள் வரை வதக்கி இறக்கவும்.


ஐரோப்பாவின் முதல் 24 மணிநேர தமிழ் வானொலி
ரீ.ஆர்ரி தமிழ் ஒலி

தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி

FACE

தேசம் கடந்தாலும் வீசும் காற்றாக உங்கள் வாசல் தேடிவரும் வானொலி
ரீ.ஆர்ரி தமிழ் ஒலி



உங்கள் TRT தமிழ் ஒலியில் வணக்கம் தமிழ்ஒலி, காலைப் பூந்தென்றல், வானெலிக் குறுக்கெழுத்துப்போட்டி, இசையும் கதையும், வியாழன் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல் சமூகமேடை (துல்லியமான பக்கசார்பற்ற அரசியல் ஆய்வு), சங்கமம், பாடுவோர் பாடலாம், உதவுவோமா?, தாயக உறவுகளைக் கைவிடமாட்டோம், சமூகப்பணி. நிகழ்ச்சி : பாட்டும் பதமும், சமைப்போம் ருசிப்போம், இராக்கோழி இன்னும் பல நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு மகிழலாம்.

www.tamilolli.com
செயற்கைக்கோள் ஒலிபரப்பு,
EUTELSAT Eurobird 9A
Frequency N° 11919 H (Horizontal)

# MONDAY TO THURSDAY

À LA CARTE

SRI LANKAN & SOUTH INDIAN SPECIALS


**HOPPERS AVAILABLE**



- With fine dining service

(À la Carte menu only)
DINNER 6:00pm - 11:00pm
"NEW MENU IS AVAILABLE
WITH MORE VARIETIES"

Most of the world famous Cocktails
& Mocktails are available now......







Please call **0208 4222575** for more information & reservation...

RISING SUN
HOTEL • RESTAURANT • BAR

**RISING SUN HOTEL & RESTAURANT**
138, Greenford Road, Sudbury Hill
Harrow, Middlesex, HA1 3QL
Tel: 020 8422 2575
Fax: 020 8422 9198
www.risingsunhotels.com

## TGTE CONDOLES DEATH OF FORMER UN SECRETARY GENENAL

# KOFI ANNAN



*"Sri Lanka prevented Kofi Annan from engaging with LTTE on reconstruction and also visiting the tsunami-ravaged Tamil areas and meeting with Tamil victims"*

The Transnational Government of Tamil Eelam (TGTE) is saddened by the demise of Kofi Annan, the former UN Secretary General, Nobel peace laureate, architect of the UN's millennium development goals, and who provided the rationale for the international community to protect populations subjected to human rights violations by dictatorial regimes.

Following the 2004 Asian tsunami, Kofi Annan was supposed to visit the affected areas and discuss with the Sri Lankan government rehabilitation and reconstruction work in southern part of the country and with the Liberation Tigers of Tamil Eelam (LTTE) about the reconstruction rehabilitation work in the Northeast of Sri Lanka.


The then President of Sri Lanka Chandrika Kumaratunga not only prevented the Secretary General from engaging with the LTTE on reconstruction, but also prevented the Secretary General from visiting the tsunami-ravaged Tamil areas and meeting with Tamil victims.

Kofi Annan firmly believes that the UN's vital role is to protect and promote human rights. "The UN is supposed to protect the people, not just states" he said in his autobiography, "Intervention: A Life in War and Peace". He believed that the states are vehicles for individuals to realize their human rights and championed for accountability.

In the face of a lack of political will of the international community to prevent the Rwanda genocide and the Srebrenica massacre, Kofi Annan asked tough questions. "If humanitarian intervention is indeed, an unacceptable affront on sovereighty, how should we respond to a Rwanda, to a Srebrenica, to gross and systematic violation of human rights that offend every precept of our common humanity?" The above question led to the evolution of the norm called Responsibility to Protect. (R2P), that was implemented in the case of the UN mandating protection for Kosovo from attack by the Serbian government.

The people of Tamil Eelam will remember Kofi Annan fondly for his great efforts on part the oppressed people of the world, for championing the cause of humanitarian values and for bravely standing up to dictatorial governments everywhere around the world.

## RECONCILIATION IS NOT POSSIBLE IF, THE SOUTH WANTS TO SUBJUGATE NORTH AND EAST, SAYS CM TO FOREIGN DELEGATES



The Chief Minister of NPC, C.V.Wigneswaran has pointed out to foreign representatives that if the South wants to subject North and East, no reconciliation could be established here. If those in the South act in a way to keep North and East, under their domination, we cannot establish goodwill and Reconciliation at any time, he has said and had pointed out that only if we are treated like equals, Reconciliation could be established. More than 40 representatives from China and European countries, met CM, C.V.Wigneswaran at his Office and held discussions with him. Speaking to the media after the meeting, the CM said as above. After I explaining the situation here, they asked question and updated themselves.

I explained to them about the Army continuing to stay here, colonizing people from the South here after saying that Mahaweli waters will be diverted to the North, not providing any water from Mahaweli. They told me that they have come to know several matters hitherto unknown to them, after speaking to us. This was a cordial discussion and we were benefited by talking to these representatives of several countries. We were able to comprehend their respective background, their proposals, and on what basis they are raising the questions, said the CM.


Sri Lankan Tamil Genocide !

We the survivors of the Genocide by Sri Lankan state are still waiting for justice and Accountability. We are requesting you and your friends to sign this petition. Please ask your friends and family member to sign this petition by using the web link or QR code and also encourage your local British MP to support this petition!

British Government is urged to lead the referral of Sri Lanka to the International Criminal Court (ICC) for repudiation of UNHRC resolutions!

Petitions
UK Government and Parliament

http://petition.parliment.uk/petitions/225395


இந்த மாதம் 12ம் திகதி ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கையம்மனின் தேர்த்திருவிழாவின் போது பிரித்தானியத் தமிழர் ஒன்றியம் ஓர் சுற்றிக்கையும், கையொப்பம் திரட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தது.

இதில் ஈழத்தமிழருக்கு 2009இல் இடம் பெற்ற இனப்படுகொலைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக துண்டுப் பிரசுரங்கள் பகிரப்பட்டன.



Silverline
FINANCIAL SERVICES

# No fee mortgage advice.

◆ New Purchase ◆ Re-Mortgage ◆ Buy to Let ◆ Life Cover
◆ Income Protection ◆ General Insurance
◆ Critical Illness Cover ◆ Bridging Loan

Our adviser can provide expert advice and offer a wide range of mortgage products to suit you.

428 Rayners Lane, Pinner, HA5 5DX
020 8421 4073
info@silverlinefs.com

Your home may be repossessed if you do not keep up with the payment on your mortgage.

SILVERLINE FINANCIAL SERVICES LTD REGISTERED IN ENGLAND 09459952, WHICH IS AUTHORISED AND REGULATED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

GOT A PROPERTY TO LET
%
MANAGEMENT FEES
FOR 6 MONTHS

GOT A PROPERTY TO SELL
.75%
SALE
COMMISSION

- உங்கள் வீடு கடைகள் போன்றவற்றை அதிக விலையில் விற்கவும், உத்தரவாத வாடகைக்கு கொடுக்கவும் எம்மை அழையுங்கள்.
- எமது 12 வருட அனுபவத்தின் பயனை நீங்களும் அடைய உங்களுடைய வர்த்தக நிலையங்கள், குடியிருப்பு வீடுகள் (FLAT) என்பனவற்றின் விபரங்களை எமக்குத் தெரியப் படுத்தினால் நாம் அவை தொடர்பான தேவைகளை உடனடியாக ஏற்பாடு செய்து தருவோம்.
- வீட்டு உரிமையாளர்கள், வாடகைக் குடியிருப்பவர்கள், ஏற்கனவே சொத்துக்களை எம்மூலம் விற்பனை செய்தவர்களுக்கும் எம்மூலம் வாடகைக்கு கொடுத்தவர்களுக்கும் வாடிக்கையாளர் களின் நம்பிக்மையைப் பெற்ற நிறுவனமாக நாம் இருப்பது பெருமைக்குரிய விடயம்.

எனவே நீங்களும் எம்மை அழையுங்கள்:

- Do you want to sell your property?
- Do you want to rent your flat or house?
- 12 year experience in property – Estate Agency
- We can provide rent guarantee with your letting properties
- We will achieve the best price for your property
- You call us for your solution

Kronos
ESTATE AGENTS
0208 00 444 77
www.kronosestates.co.uk,428 Rayners Lane, Pinner, HA5 5DX


metro
Metro Habitat (Pvt) Ltd
No 14, Rudra Mawatha, Colombo 06.
No.28, Fredrica Road
Wellawatté
No.40, E.S Fernando Mawatha,
Wellawatte
No.41, Arethusa Lane,
Wellawatte
+44 747 580 6980
+94 777 306 304
metro
metro habitat (pvt) ltd.
No.94,Chatham street, Colombo 01
Sri Lanka
www.metrohabitat.lk
info@metrohabitat.lk
www.facebook/metrohabitats